ISSN 2536-8788

மலர் – 05 இதழ் – 01

# சின்மய நாதம்

சின்மயா மிஷன் – வடமாகாணக் கிளையின்
காலாண்டு ஆன்மிக இதழ்


ஆடி – புரட்டாதி – 2017

ரூபா 30/=









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சுவாமிஜிகளின் இலங்கை விஜயம்



அசோக வனத்தில்....



சீத்தா எலியவில்....



சுவாமினி விமலானந்தாஜி



சுவாமி நிகிலானந்தாஜி



யாழ் விஜயத்தின் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்மய நாதம்
# CHINMAYA NADHAM

சின்மயா மிஷன் வடமாகாணக் கிளையின்
காலாண்டு ஆன்மிக இதழ்

*Quarterly*
*Spiritual Magazine of*
*Chinmaya Mission of Srilanka (North)*

CHINMAYA MISSION
SRI LANKA

ஸ்தாபகர்

## சுவாமி சின்மயானந்தா


### ஆசிரியர் ஆலோசனைக்குழு

தலைவர் :- ஸ்வாமி தேஜோமயானந்தா
அங்கத்தவர்கள் :- பிரம்மச்சாரி தர்சன் சைதன்யா
பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா
பிரம்மச்சாரிணி மகிமா சைதன்யா

### ஆசிரியர் குழு :

ஆசிரியர் :- செல்வி.ஓ.சண்முகநாதன்
அங்கத்தவர்கள் :- திரு. செ.சிறீகந்தவேல்
திரு. சு.பாலச்சந்திரன்
திருமதி.ய. ஓம்சக்தி

### சந்தா விபரம்

| காலம் | வீதம் |
| --- | --- |
| 1 வருடம் | ரூபா 230/- (தபாற் செலவுடன்) |
| தனிப் பிரதி | ரூபா 30/- |

சின்மய ஞானவேல், சின்மயா மிஷன்,
இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பேசி:- 021 222 3447
மின்னஞ்சல்:- info@chinmayamissionjaffna.org
இணையத்தள முகவரி:-www.chinmayamissionjaffna.org


ஆடி – புரட்டாதி 2017
17 வது இதழ்

## சின்மய போதனை



### அன்பின் ஆற்றல்

அன்பு மதங்களின் இதயம், சிறந்த கலை இலக்கியப் படைப்புக்களின் கருப்பொருள். பக்தர்களின் பாடல்கள், விஞ்ஞானி அன்பு என்ன செய்யும் என்று மட்டும் அறிவானே தவிர அன்பு என்றால் என்ன? என்பது பற்றியல்ல. உண்மையில் அன்பு எமது அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், தஞ்சம் கோரி வாழும் புகலிடங்கள், மற்றும் சிறைச்சாலைகள், ஏன் வைத்தியசாலைகளைக் கூட வெறுமையாக்கக் கூடிய சக்தி வாய்ந்தது. அன்பு கிடைக்காத தாலேயே மக்கள் அதிக துன்பத் துக்கு உள்ளாகின்றார்கள். மலர்கள் மலர்வதற்கு எவ்வாறு சூரிய ஒளி உதவுகின்றதோ அவ்வாறே மனித இதயங்கள் மலர்வதற்கு அன்பு உதவுகின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# பொருளடக்கம்


| இல | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 01. | பிரார்த்தனை | 03 |
| 02. | குரு தியானம் | 04 |
| 03. | மனமும் அதன் பலமும் | 05 |
| 04. | இறைவன் கையில் நாம் கருவிகள் | 06 |
| 05. | உற்சாகம் – மனிதனை ஊக்குவிக்கும் முதன்மை சக்தி | 08 |
| 06. | உதவி பெறுவதிலும் அளிப்பதிலும் எமது மனப்பான்மை | 12 |
| 07. | இந்து சமயமும் புனித யாத்திரையும் | 14 |
| 08. | சின்மய சிந்தனை | 21 |
| 09. | கந்தர் அனுபூதி புகட்டும் வேதாந்தம் | 23 |
| 10. | தெய்வத்தின் கணக்கு | 24 |
| 11. | குரு தேவரிடமிருந்து குழந்தைகட்கு | 27 |
| 12. | பாலர் பக்கம் | 30 |
| 13. | இலங்கையில் இராமாயணம் | 31 |
| 14 . | இந்திய சுவாமிகளின் யாழ்விஜயம் | 33 |
| 15. | செய்திகள் | 36 |
| 16. | நிகழ்வுகள் | 38 |
| 17. | விசேஷ தினங்கள் | 40 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்ரார்த்தனை



**प्रौढोऽहं यौवनस्थो विषयविषधरैः पञ्चभिर्मर्मसन्धौ**
**दष्टो नष्टो विवेकः सुतधनयुवतिस्वादसौख्ये निषण्णः ।**
**शैवीचिन्ताविहीनं मम हृदयमहो मानगर्वाधिरूढं**
**क्षन्तव्यो मेऽपराधः शिव शिव शिव भोः श्रीमहादेव शम्भो ॥३॥**

**ப்ரெளடோsஹம் யௌவநஸ்தோ விஷயவிஷதரை**
*பஞ்சபிர் மர்ம ஸந்தௌ*
**தஷ்டோ நஷ்டோ விவேக: ஸுததனயுவதிஸ்வாத**
*ஸௌக்யே நிஷண்ண: |*
**சைவீசிந்தாவிஹீனம் மம ஹ்ருதயமஹோ மானகர்வாதிரூடம்**
**க்ஷந்தவ்யோ மேsபராத: சிவ சிவ சிவ போ: ஸ்ரீமஹாதேவ சம்போ||3||**

நான் முதிர்ந்தவன் வாலிபத்தில் இருந்து புலப் பொருட்களின் விஷத்தை எடுத்துச் செல்லும் ஐம்புலன்களால் கடிக்கப்பட்டு எனது விவேகம் அழிந்துவிட்டது. குழந்தை, பெண், செல்வம் இவைகளை அனுபவிப்பதால் ஏற்படும் ஆனந்தத்தில் திளைத்து இருத்தலில் என் இதயம் முழுவதும் ஆணவமும் அகங்காரமும் சூழ இருக்கின்றது. ஐயனே! மஹாதேவனே! சம்போ! எந்தன் பாபம் மன்னிருத்தருள வேண்டும்.

*சிவாபராத க்ஷமாபண ஸ்தோத்திரம்*
*ஆதிசங்கரர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு தியானம்



ज्ञानशक्तिसमारूढ तत्त्वमालाविभूषिणे ।
भुक्तिमुक्तिप्रदात्रे च तस्मै श्रीगुरवे नमः

ஜ்ஞான சக்திஸமாரூட-தத்வமாலா விபூஷிணே ।
புக்தி-முக்தி ப்ரதாத்ரே ச தஸ்மை ஸ்ரீ குரவே
நமஃ ॥

ஞானசக்தியாகிற வாகனத்திலெழுந்தருளி தத்துவ மாலையால் அலங்கரிக்கப் பெற்றிருப்பவரும் போகத்தையும், மோக்ஷத்தை யும் அளிப்பவருமான அந்த குருவிற்கு நமஸ்காரம்

*குரு கீதை 1 - 62*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமும் அதன் பலமும்

மழை நீரானது மிகவும் தூய்மையான நீராக மலையில் பொழி கின்றது. அந்நீரானது சிற்றருவிகளாக மலையில் உள்ள சிறு கற்கள் மண் ஆகியனவற்றையும் உருட்டிக் கொண்டு சமதளத்தை அடைந்ததும் காட்டாற்று வெள்ளமாக வேகமாக ஓடி கடலை அடைகின்றது. இதனை நாம் அணைபோட்டு தடுத்து நாட்டின் நீர் தேவையைப் பூர்த்தி செய்யுமாறு பயன் படுத்தினால் நாடு செழிக்கும். நீரும் வீணாகாது.

இவ்வாறே எமது எண்ணங்களின் தொடர் ஓட்டம் – மனம் – உரிய இடத்தில் தடுத்து திசை மாற்றப்படும் போது அரிய சாதனைகளைப் படைக்கக் கூடிய ஆற்றலைப் பெறுகின்றது. மனதின் இயல்பு குறித்து பகவான் கிருஷ்ணர் கீதையில், **"உன் மனம் தான் உனக்கு உற்ற நண்பன் உன் மனமே எதிரியும் ஆகும்.**

நன்கு பயிற்சியளிக்கப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டு உன் கட்டுப் பாட்டுக்குள் உள்ள மனமானது உற்ற நண்பன். (மாறாக) உன்னைக் கட்டுப்படுத்தும் மனமோ மிகவும் திறமை சாலியான எதிரி" என்று கூறுகின்றார்.

புத்தியானது எந்தவொரு சூழ்நிலையையும், செயலையும் சீர்தூக்கி எது நல்லது, எது தீயது எனும் தீர்மானத்தை எடுக்கும் சக்தி வாய்ந்தது. இந்தப் புத்தியையும் ஏமாற்றி தன் வழியில் செயற்படும் சக்தி மனதுக்கு உண்டு. அந்த நிலையே திறமையான எதிரி. மனமானது பொறிகள் ஆகிய மெய், வாய், கண் மூக்குச் செவிகளால் வழி நடாத்தப்படுகின்றது. இவற்றின் வழி மனம் செல்லும் போது அதனைக் கட்டுப்படுத்தி அவற்றைத் தர்மத்துக்கு உட்பட்டுச் செயற்பட பயிற்சி அளிக்கும் போது ஒரு மனிதன் நல்லவனாக, வல்லவனாக, சமூகத்தில் உயர் நிலைபெறும் உத்தமனாக வாழும் வாய்ப்புக் கிட்டுகின்றது.

இதனை விடுத்து தர்ம நெறிக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடும் போது மனிதன் தன்வாழ்வை அழித்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.மனதை முற்றாக அடக்கி தடுத்து நிறுத்துவது என்பதல்ல. அதனை நல்வழியில் திசை திருப்பி, எண்ணம், சொல் செயல் மூன்றும் ஒரே நிலையில் நல்லனவாக அமையும்போது மனது பலம் பெறுகின்றது. அத்தகைய மனம் படைத்தவன் பலவான் ஆகின்றான்.

**மனமது செம்மையானால்**
**மந்திரம் செபிக்க வேண்டாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் கையில் நாம் கருவிகள்

(சுவாமி தபோவன் மகராஜ்)

இவ்வுடலைக் கருவியாக வைத்துக் கொண்டு இறைவன் ஏதோ சாதிக்க நினைத்திருக்கிறான். இல்லாவிடில் பலவீனமான இந்த உடல் பனியில் இறந்திருக்க வேண்டும்.

ஈஸ்வரன் இவ்வுடலை உயிரற்றதாகச் செய்ய இதைவிட வேறு தகுந்த சூழ்நிலையை எப்படி அடைய முடியும்? ஆனால் இறைவன் வேறு வித மாக நினைத்தான். ஒவ்வொரு வேலைக்கும் இறைவன் ஒவ்வோர் உடலை யும் கருவியாகச் செய்ய வேண்டும் என நினைத்தான்.

இறைவன் நம் செயல்களுக்குப் பலன் அளிப்பவன். ஆனால் மக்களுடைய செய்கைகளுக்குப் பலன் அளிக்க இறைவன் நேரில் வருவதில்லை. ஒவ்வொருவரையும் காரணமாகக் கொண்டு, இன்பத்தையும் துன்பத்தையும் அளித்து அவர்களுக்குத் தேவையானதையும் அளிக்கிறான். எல்லா ஜீவராசிகளின் உள்ளே இருந்து, அளவிட முடியாத, அறிய முடியாத இறைவன் எல்லாவற்றையும் சிரமமில்லாமல் ஆட்சி செய்வதை, சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. இவ்வுலகில் நமக்கும் எல்லா காரியங்களுக்கும், ஜீவராசிகள் கருவிகளாகிறார்கள். நம் எல்லோரையும் ஆட்டுவிக்கும் மகேஸ்வரன், நம்மை பொம்மை போல் ஆட்டுவிக்கிறான் என பகவத்கீதையில் பகவான் தெளிவாக்குகிறார்.

இறைவன் கையில் நாம் கருவிகள் "நிமித்த மாத்திரம்" எனப்புரிந்து கொண்டால், மனிதர்களுக்கு எவ்வாறு கவலையும், துக்கமும் வரும்? நான் செய்பவன், நான் அனுபவிப்பவன் – இவ்வாறு மனது எண்ணுவதை நிறுத்த ஆரம்பித்தால், கவலைக்கோ, துக்கத்திற்கோ மனதில் ஏது இடம்? எல்லா செயல்களுக்கும், அந்த சக்தி வாய்ந்த இறைவன் தான் காரணம் என அறிந்து ஒருவன் அகங்காரம், மமகாரத்துடனான செயல்பாட்டைத் துறந்து, தன்னலமற்று, இறைவனின் கருவியாக செயற்பட்டால் அவன்தான் பெரிய கர்ம யோகி. எல்லா செயல்களுக்கும் காரணமாக இருப்பவன் ஈஸ்வரன். அவன்தான் எல்லா காரியங்களுக்கும் பலனளிப்பவன். இந்த ரகசியத்தை அறிந்த கர்மயோகி தன்னுடைய காரியத்தை தனதாக எண்ண மாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இந்த வேலையை நிச்சயம் முடிப்பேன். இந்த வேலையைச் செய்தால் உலகிற்கு நன்மை செய்ய முடியும் என்று எண்ண மாட்டான், இறைவனைத் தவிர மனிதனால் உலகிற்கு நன்மைகளைக் கொண்டு வரும் சக்தியும் உரிமையும் இல்லை. தன் உயிரை விட மேலான தன்னுடைய மனைவிக்கும், குழந்தைகளுக்கும் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய சக்தி கூட மனிதனுக்கு இல்லை. அவன் எவ்வளவு முயன்றாலும், ஏமாற்றமடைகிறான் என்பதே இவ்வுலகம் அறிந்த உண்மை.

"இவ்வுலகில் சுயநலமில்லாத காரியங்களால் என்ன பயன்?" என்று சிலர் கேட்கலாம். உலகத்தின் பார்வையில் கர்ம யோகியின் செயல்கள் வெற்றிகரமாகவோ, தோல்வியாகவோ இருந்தாலும், அது அந்த கர்ம யோகியின் மனதை பரிசுத்தமாக்குகிறது.

உலகத்தின் நன்மை – தீமை ஆகியவைகள் கர்மயோகியின் செயல் பாடுகளின் பயன் என மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் அப்பேர்ப்பட்ட விளைவுகள் வரலாம் அல்லது வராமலும் இருக்கலாம். சிறந்த விளைவான ஆத்ம சுத்திதான் நிரந்தர விளைவு. உலகத்தின் விளைவுகள் எல்லாம் ஈஸ்வரனின் அதிகாரத்தில் உள்ளது. செய்கைகளின் ரகசியத்தை அறியாத முட்டாள்கள்தான் நான் உலகிற்கு சேவை செய்து, அதற்கு நன்மை ஏற்படுத்து கிறேன் என்று கர்வமாகக் கூறுவார்கள். மனிதனுக்கு நல்ல எண்ணத்துடன் செய்கைகள் செய்யும் அதிகாரம் தான் உள்ளது. ஆனால் உலகிற்கு நன்மை பயப்பது இறைவனிடம் தான் உள்ளது. ஆகையால் உலகில் செயல்களைச் செய்து பலன்கள் அனுபவிக்கும் இந்த உடல் என்னும் கருவியைக் காப்பதற் கும் அழிப்பதற்கும் இறைவனுக்குத்தான் சுதந்திரம் உள்ளது. ஏதாவது ஒரு காரணத்திற்காக இறைவனுக்கு இவ்வுடல் தேவைப்பட்டால், வேறு யாருக்கும் இவ்வுலகில் அதை அழிக்க சக்தி இல்லை. எல்லாமே இறைவனின் அருள், இறைவனின் இச்சை, வேறு என்ன கூறமுடியும்?

***நன்றி - கைலாஷ்யாத்திரை.***

**'பணி' வேறு 'வேலை' வேறு. வியர்வை சொட்ட களைப்புற்று ஒன்றைக் கடமை என்று செய்து முடிப்பது வேலை. ஆனால் பணி என்பது உன்னதமானது. மனமுவந்து மனதில் ஊறும் அன்பின் அடையாளமாகப் பரிணமிப்பதே பணி.**

***சுவாமி சின்மயானந்தர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# – உற்சாகம் –

## மனிதனை ஊக்குவிக்கும் முதன்மை சக்தி

**சுவாமி – சின்மயானந்தர்**

உற்சாகம்தான் மனிதனை ஊக்குவிக்கும் முதன்மையான சக்தியாகும். உலகில் சாதனை படைத்த அனைவரிடமும் இந்த உற்சாகம் அளப்பரியதாக இருப்பதைக் காணலாம். அதன் காரணமாகத்தான் எந்த செயலை செய்யும் பொழுதும் அவர்களால் அதிசயிக்கத்தக்க ஆற்றலை வெளிக் கொணர முடிகிறது. ஆன்ம ஞானம் பெறும் முயற்சியாயிருப்பினும், நாட்டின் கலாசாரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதாக இருப் பினும் இம் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுக்குள் மறைந்திருக்கும் இந்த ஆற்றலை உணர்ந்து அதனை வெளிக்கொணர முயற்சிக்க வேண்டும். அதனை பயன்படுத்த வேண்டும்.

மனச்சோர்வும், நம்பிக்கையற்ற மனப்பாங்கும் உள்ளவர்களுக்கு எச்செயலைச் செய்யவும் உற்சாகம் இருக்காது. வாழ்க்கையே அர்த்தமற்ற வெறுமை நிறைந்த ஒன்று. மனிதர்கள் நம்பக்கூடியவர்கள் அல்லர். சூழ்நிலை கள் எப்பொழுதும் துக்கம் நிறைந்தவையாகவும், பாதகமாகவும் தான் இருக்கும் என்று இந்த மனிதர்கள் எப்பொழுதும் மற்றவர்களைப் பற்றியும், சூழ்நிலைகளைப் பற்றியும் குறை கூறிக்கொண்டு முனகுவதும், அழுவதுமாக இருப்பார்கள். அவர்களுக்குத் தங்களைச் சுற்றியுள்ள அனைவரிடமும் கோபம் வரும். தங்களைச் சுற்றி நிகழும் எதையும் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. எதிர்காலத்தைப் பற்றிய எத்தகைய கனவுகளையும், அவர்கள் எதிர்ப்பார்கள். அவர்கள் செயல் பட விரும்ப மாட்டார்கள். வேலை களை அக்கறையின்றி செய்வார்கள். கற்பனையான துக்கத்திலும், தோல்வி யிலும் மூழ்கியிருப்பார்கள். அத்தகைய மனிதர்களிடம் வாழ்வதற்கு வேண்டிய அடிப்படை உற்சாகத்தைக்கூடக் காண முடியாது.

துக்கத்திலே மூழ்கி, நம்பிக்கை அறவேயற்ற இத்தகைய மனிதர் களுக்கு முற்றிலும் மாறுபட்டவர்கள் நம்பிக்கையே உருவானவர்கள். இவர் கள் எப்பொழுதும் உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும், தளராத உத்வேகத் துடன் விளங்குவர். எதிர்காலத்தைப் பற்றிய தளராத நம்பிக்கையுடைய வர்கள் இருவகைப்படுவர் – (1) அறிவாளிகள், (2) மற்றவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு பூர்வமான நம்பிக்கை படைத்தவன் கண்களுக்கு இவ்வுலகம் எப்பொழுதும் அழகாகவும், நன்மை நிறைந்த ஒன்றாகவும் தெரிகிறது. அத் தகைய நிலையிலேயே இவ்வுலகை வைத்திருக்கவும் அவன் முழுமையாக ஈடுபடுவான். அத்தகைய மனிதன் இயற்கையாகவே இனிமையான ஸ்வபாவம் உள்ளவனாக விளங்குவான். வாழ்க்கையின் பிரகாசமான, நன்மையான அம்சங்களை மட்டும் காணும் பழக்கத்தினால் அவனுடைய இயல்பே இனிமையான ஒன்றாக மாறியிருக்கும். வாழ்க்கையில் தான் தேடு வதை அவனால் எளிதில் அடையமுடியும். வாழ்க்கையில் அவன் எட்டும் ஒவ் வொரு வெற்றியும் மேலும் பல வெற்றிகளை எட்ட அவனை உற்சாகப்படுத் தும், இவ்வாறு அவன் மகிழ்ச்சியில் என்றும் திளைத்திருக்கிறான். தன்னுடைய மகிழ்ச்சியை பிறருடன் பகிர்ந்து கொள்வான். உலகில் சாதனை கள் பல புரிவான். அவற்றை பிறருடன் பகிர்ந்துகொண்டு அவர்களையும் மகிழ்விப்பான். அவனுடைய உற்சாகம் அவனது வாழ்க்கைக்கே ஒரு உத்வேகத்தை கொடுக்கிறது. அதுமட்டுமல்ல. அவனுடைய அந்த உற்சாகம் மற்றவர்களுக்கும் தொற்றிக்கொள்ளும். அவனுடைய பிரகாசமான, மகிழ்ச்சி நிறைந்த இயல்பு மற்றவர்களையும் அவரவர் வேலைகளில் உற்சாகத்துடன் ஈடுபட ஊக்குவிக்கிறது.

முழு உற்சாகத்துடனும், நம்பிக்கையுடனும் செயலில் ஈடுபடும் நம்மில் பலரிடம் அவ்வப்பொழுது ஆர்வம் குறைவதைக் காணலாம். அவ்வாறு குறையும் பொழுது சிலர் செயல் புரிவதை அறவே நிறுத்திவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றும் விடுவார்கள். அவர்கள் ஆரம்பித்த வேலை முடிவு பெறாமல் அரை குறையாக நிற்கும் நிலையில், புதிதாக ஒன்றைத் தொடங்கும் ஆர்வத்துடன் வேறு இடம் நாடிச்செல்வர். இவ்வாறு பல முறை செயல்படுவோமானால், வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் நம்மைச்சுற்றி அரை மனதுடன் தொடங்கி முழுமை பெறாது, அரைகுறையாக நிற்கும் பலன் கள் சிதறிக் கிடப்பதைத்தான் நம்மால் காண முடியும். வருந்தத்தக்க தோல்வி களும், கண்ணீரை வரவழைக்கும் நஷ்டங்களும் தான் மிஞ்சும். முடிவில் ஏற்றுக்கொள்ள முடியாத பயங்கரமான அழிவு தான் எஞ்சும்.

இத்தகைய மனிதர்களிடம் காணப்படும் உற்சாகம் எப்பொழுதும் ஒரேயளவாக இருக்காது. இதற்குக் காரணம் இவர்கள் பொறுமையற்றவர் களாக இருப்பது தான். உண்மையாகவே நல்ல திறமையுடையவர்கள் உற்சாகத்துடன், பொறுமையையும் கடைப்பிடிப்பார்கள். அவர்கள் ஊக்கத் துடன் செயலில் ஈடுபடுவார்கள். பலனைப் பெறுவதற்காக காத்திருக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராக இருப்பார்கள். முறையான முயற்சிகளுக்கு இவ்வுலகில் என்றும் சரியான விளைவுகள் ஏற்படும் என்ற உறுதியான நம்பிக்கை அவர்களுக்கு உண்டு.

இதனால் அவர்கள் அறிவு பூர்வமான தன்னம்பிக்கையுடன் விளங்கு வார்கள். இத்தகைய மனப்பாங்கு இருப்பதனால் இவர்களின் மனதில் ஊக்கம் என்றும் குறையாது. செயல் புரிகையிலும், சோதனைகள் வரும் பொழுதும் அது அவர்களுக்கு உறுதுணையாகவே இருக்கும். இன்னல்களும், எதிர்ப்புகளும், அவநம்பிக்கைகளும் நிராசைகளும் அவரை பலவீனப் படுத்தாது, சாதனை படைக்கும் மனிதர்களின் செயல்திட்டம் – எதிர்காலத்தைப் பற்றிய ஆரோக்கியமான நம்பிக்கையுடன், முழு உற்சாகத்துடன் செயல்படுவது தான்.

வாழ்க்கை என்பது இறுதி வரை கட்டுப்பாடுகள், இடர்கள் நிறைந்த ஒன்று தான். பெரிய சாதனைகளைப் படைக்க விரும்பினால், உயர்ந்த இலட் சியங்களை அடைய ஆசைப்பட்டால், அதற்கு ஒரு விலையை நாம் கொடுத்தே ஆகவேண்டும் – நம் எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றின் மேல் இடை விடாது கவனம் செலுத்த வேண்டும். அவற்றை கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும். நம் எண்ணங்களையும், செயல்களையும் இவ்வாறு உன்னிப்பாக கண்காணிக்கும் பொழுது நம் மனமும், அறிவும் கூர்மையாகின்றன. தவறான எண்ணங்கள், எதிர்மறையான மன நிலை, அலட்சியமான வார்த்தைகள் மற்றும் கீழ்த்தரமாக இனங்கண்டு கொள்ளும் திறமை நம்முள் வளர்ந்து மெருகூட்டும். கூர்மையான இந்த கவனத்தினால் நாம் தவறாக செயல்பட முனைவது நமக்கு நொடியில் புரிந்து விடும். நம்மை நாமே திருத்திக் கொள்ள அமைதியுடன் தைரியமாக முனைவோம்.

வாழ்க்கையின் அடிப்படை அழகையும், எவ்வாறு சீரிய முறையில் அதனை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதனையும் நாம் உணர்ந்து கொண்டு விட்டோமானால் அரிய செயல்களை புரிவதற்காக நம்மை தயார் படுத்திக் கொள்வது எளிது. இல்லையெனில் மக்களுக்கு சேவை புரிய வரும் எவரும் சமூகத்தில் குழப்பத்தைத் தான் உண்டாக்குவார். இவர்களைப் பின் பற்றுபவர்கள் தடுமாறி தறிகெட்டுப் போகவும் வாய்ப்புண்டு. இவ்வாறாக சமூகத்திற்கு கேடும், துன்பமும் விளையும். ஆகவே சமூகத் தொண்டு செய்ய முனையும் எவரும் தன்னை குறையற்றவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். சுய கட்டுப்பாடும், கண்காணிப்பும் நிறைந்த வாழ்க்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் தன்னை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் ஸ்ரீமன் நாராயணனின் ஸ்வரூபமாக உள்ள மக்களுக்கு அவனால் சேவை செய்ய முடியும்.

நாள் தோறும் தவறாது, மிகுந்த ஆவலுடன் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும். பிரார்த்தனை ஆழ்ந்த, அமைதியான தியானத்துடன் முடிவடைய வேண்டும். இதன் மூலமாக நம்முள் மறைந்து கிடக்கும் உற்சாகத்தினையும், பொறுமையையும் தட்டி எழுப்ப முடியும். கூர்மை பெற்றுவிடும் மனத்தின் உதவி கொண்டு தவறான எண்ணங்களையும், முறையற்ற செயல்களையும் எளிதில் கண்டு கொண்டு அவற்றினை முளையிலேயே கிள்ளி விட முடியும்.

பிரார்த்தனை, தியானம் ஆகியவற்றின் வாயிலாக எங்கும் பரவி யிருக்கும் பரம்பொருளுடன் நமக்குள்ள ஒற்றுமையை உணர்வோமாக. அளப்பரிய ஆற்றல் படைத்த அந்த பரம்பொருள் நம்முள்ளே உறைகின்றான் என்ற உணர்வு நம்முள் அகங்காரத்தை வளர்க்காது. மாறாக நம்முள் இறை வனின் ஒப்பற்ற ஆற்றலும், அருளும் நிறைந்திருக்கிறது என்னும் எண்ணம் நமக்கு உற்சாகத்தையும், தைரியத்தையும் கொடுக்கும். எவ்வாறு நம்முடைய பணம், நிலம் போன்ற சொத்துக்கள் தேவைப்படும் பொழுது நமக்கு உதவுகின்றனவோ அவ்வாறே நமது மன ஆற்றல்கள் நமக்கு உதவ வேண்டும்.

ஆத்மாவின் அளப்பரிய ஆற்றலை அறிந்து கொள்வோமாக, அதனை உணர்ந்து கொள்வோமாக. நாம் மேற்கொள்ளும் மகத்தான செயல் களுக்குத் தேவையான ஆற்றலை அதனின்று பெறுவோம்; பெருமை வாய்ந்த நமது கலாசாரத்தை மக்களிடையே புத்துயிர் பெறச் செய்வோம். நம்முடைய செயல்களுக்கு அங்கீகாரத்தையோ, அவற்றிற்கான பலன்களையோ, தேடியலைய வேண்டாம். மாறாக செயல்களின் தரத்தைப் பற்றி நாம் கவலைப்படுவோம். – நாம் இதற்கு முயன்றேயாக வேண்டும். முழுமையாக, நிறைவாக செயல்களை செய்வதில் தான் அழகும், ஆனந்தமும் உள்ளது என்பதைப் புரிந்துகொள்வோம் – இதை நாம் நினைவில் கொண்டேயாக வேண்டும். முறையான உண்மையான, இடைவிடாத பிரார்த்தனை, தியானம் இவற்றின் மூலம் நம்மை தூய்மைப் படுத்திக் கொண்டு, அருஞ்செயல் புரிய நம்மை தயார்படுத்திக் கொள்வோம். இதை நாம் செய்தேயாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி பெறுவதிலும் அளிப்பதிலும் எமது மனப்பான்மை

(சுவாமி தேஜோமயானந்தர்)

जीवनं विनयेनैव शोभते

ஜீவனம் வினயேனைவ சோபதே

பணிவுடன் இருக்கும் வாழ்க்கையே இனிமையானது ||

**வெற்றி பெறுவதற்காக தாழ்தல்**

ஒருவரிடம் அறிவு, செல்வம், நற் பண்புகள் எல்லாம் இருக்கலாம். ஆனால் அவர் பணிவுடன் இல்லையென்றால், அனைத்தும் வீண் தான். பணிவு இருந்தால் எல்லாம் அழகாக இருக்கும். கீதையில் (13.7) கூறப்பட்டிருக்கும் இருபது அவசியமான பண்புகளில் முதலாவதாக இருப்பது பணிவு தான் உண்மையான அறிவு பணிவை நல்கும் (வித்யா ததாதி வினயம்) பூஜ்ய குருதேவர் அவர்கள், "அது ஒரு புதுமையான நற்பண்பு. நாம் பணிவுடன் உள்ளோம் என்று நீங்கள் நினைத்த அந்த நொடியிலேயே, நீங்கள் அதை இழந்து விடுவீர்கள்",என்று கூறுவதுண்டு. வெளிவேஷமான பணிவு, பணிவாகாது. எல்லா கர்வமும் (மான) மறைந்த பின் எஞ்சியிருப்பது பணிவு (அமான).

மிகச் சிறந்த துறவியான ரஹீம், உயரிய நிலையில் வாழ்ந்தவரும் கொடைத் தன்மைக்கு பெயர் பெற்றவரும் ஆவார். அவர் மற்றவருக்கு எதையும் அளிக்கும் பொழுது தன் கண்களை கீழ் நோக்கியே வைத்திருப்பார். இதைப்பற்றி அவரிடம் கேட்ட போது, அவர் "நான் உதவி அளிப்பதைக் கண்டு பொய்யாக புகழும் மக்களின் கண்களை என்னால் எதிர் கொள்ள இயலாது. இறைவன் தான் எப்பொழுதும் அளிப்பவர்", என்று கூறினார். ஒருவர் தற்பெருமையுடன் கொடுக்கும் பொழுது, வாங்குபவரின் தன்மானம், "உங்களுடைய அறிவையும், செல்வத்தையும், நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்", என்று கூறும். நாம் பணிவுடன் மற்றவர்க்கு உதவும் போது, பெறுபவரும் பணிவன்புடன் இருப்பார். கொடுப்பவர் பணிவுடன் இல்லையென்றாலும் கூட, பெறுபவர், பணிவுடனும் நன்றியறிதலுடனும் உதவியின் பெருமையையும், கொடுப்பவரின் பெருந்தன்மையையும் பாராட்டுபவராக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

तस्मात्स्वजीवनभारं स्वीकृत्य सर्वप्रयत्नेन तत्सफलीकुर्यात्

தஸ்மாத் ஸ்வஜீவன - பாரம் ஸ்வீக்ருத்ய
ஸர்வ-ப்ரயத்னேன தத்-ஸபலீ-குர்யாத்

**ஆகையால், தனது வாழ்க்கையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, ஒருவர் எல்லா முயற்சிகளுடன் அதை வெற்றிகரமாக்க வேண்டும்.**

**வாழ்க்கையை வெற்றிகரமாக்குதல்**

நாம் தான் நம் வாழ்க்கையை எதிர்கொண்டு அதை வெற்றிகரமாக்க வேண்டும் என்று அறிந்து கொண்ட பின், அதற்குரிய முழுப் பொறுப்பேற்க வேண்டும். நமக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த அரிய வாழ்க்கைக்கு நாம்தான் பதில் சொல்ல வேண்டும். அதை வெற்றிகரமாக்குவதோ அல்லது தோல்வி அடையச் செய்வதோ, அதற்கு நாமே பொறுப்பு. வாழ்க்கையில் ஏற்படும் பல சூழ்நிலைகளுக்கு நாம் குறை கூற முடியாது. நம் வாழ்க்கையை நாம் எப்படி உருவாக்குகிறோமோ அதற்கு மற்றவர் மேல் பழி போட முடியாது.

மேலும் தவறான நம்பிக்கைகளில் வாழ்க்கை நடத்த முடியாது. முயற்சிகள் எதுவுமின்றி வெற்றி கிடைக்கும் என்று தவறாக எண்ணக் கூடாது. எவ்வித முயற்சியும் இல்லாமல், தானே நிகழ்வது முதுமை அடைவது ஒன்று தான். ஒரு இளைஞனைப்பார்த்து ஒருவர், "நீ இருபது வயது இளைஞனாக இருப்பதற்கு என்ன செய்தாய்?" என்று கேட்டார். "நான் வேகமாக வண்டி ஓட்டியும் இறக்காமல் இருக்கிறேன்", என்று அவன் கூறினான். அதற்கு அவர், "அது இறைவன் செயல்; உன்னுடையதல்ல" என்று கூறினார். நாம் வாழ்வதும் வளர்வதும் இயற்கையின் ஆற்றலாகும். 'எவ்வாறு' நாம் வாழ்ந்து முன்னேறுகிறோம். என்பது தான் நம் முயற்சிகளால் நடைபெறுவதாகும். புகழுடனும், வெற்றிகரமாகவும் வாழ்வதற்கு நாம் மிகுந்த முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உலகில் நான்கு விதமான மக்கள் உள்ளார்கள். வாழ்க்கை வெற்றிகரமாக நடைபெற முயல்வோர்; வெற்றிகரமாக நடைபெற பேசுவோர்; "என்ன நிகழும்" என பேசுவோர், என்ன நிகழ்ந்தது என அதிசயிப்போர் என நான்கு வகை மனிதர்கள் இருக்கிறார்கள். நாம் நம் வாழ்க்கைக்கு முழுப் பொறுப்பேற்று அதை வெற்றிகரமாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயமும் புனித யாத்திரையும்

இந்து சமயமானது எங்கும் நீக்கமற பரந்துள்ள இறைவனை வழிபடும் முறைகள் பலவற்றைக் கூறுகின்றது. அவற்றுள் யாத்திரை செல்வதும் ஒன்றாகும். இத்தகைய யாத்திரையானது தல யாத்திரை, புனித தீர்த்த யாத்திரை என இரு வகைப்படும். "புறத்தூய்மை நீராலும், அகத் தூய்மை அன்பாலும் அமைந்ததே" யாத்திரையின் சிறப்பாகும். இதனை ஒரு வருக்கொருவர் அன்பைப் பகிர்வதன் மூலம் எளிதாகக் காணலாம். இதனையே "அன்பே சிவமாகும்" "அன்பை மறுப்பவன், சிவத்தை மறுக்கின்றான்? என்பது திருமூலர் திருவாக்காகும். இத்தகைய அன்புடனும், பக்தியுடனும் கடந்த 09.05.2017, செவ்வாய்க்கிழமை ஏழு மணிக்கு நல்லூர் கந்தன் ஆலய வழிபாட்டுடன் கதிர்காமக் கந்தனை நோக்கி யாழ்ப்பாண சின்மயா மிசன் ஆச்சார்யார் மற்றும் அங்கத்தவர்களும் இணைந்து யாத்திரையை மேற்கொண் டோம்.

இவ்வாறு தொடரப்பட்ட யாத்திரை அரோகரா, சத்குருநாத் மகராஜிக்கு ஜய், பக்திப்பாடல்கள், விநாயகர் கவசம், சுப்பிரபாதம், ஹரித்வார் ரிஷிகேஷ் தரிசன யாத்திரை கதைகள், கீதா உபதேசம், இராமாயணம், மகாபாரதம் மற்றும் பஜனைப் பாடல்களுடன் மேற்கொள்ளப்பட்டது. யாத்திரையின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ்ப்பாணம் கண்டி வீதியிலுள்ள வழித்துணைப் பிள்ளையாரான முறிகண்டிப் பிள்ளையாரை வழிபட்டுக்கொண்டு தொடர்ந்து மட்டக்களப்பு ஆலயங்கள் பலவற்றைத் தரிசித்துக்கொண்டு கதிர்காமக் கந்தனை நோக்கியதாக அமைந்தது.

மறுநாள் 10.05.2017 புதன் கிழமை அதிகாலை இரண்டு மணிக்கு மட்டக்களப்பு மயிலம்பாவெளி கருணை இல்லத்தை அடைந்தோம். சிறிது நேரம் ஓய்வெடுத்ததன் பின்பு நீராடி இப்பிரதேசத்தில் உள்ள ஸ்ரீகாமாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனை காலை ஏழு மணிக்கு வழிபடச் சென்றோம். வாயிலின் முகப்பில் காட்சி தரும் அனுமந்த பெருமானைத் தரிசித்துக்கொண்டு ஆலயத்தினுள் சென் றோம். இவ்வாலயம் கருங்கல்லால் அமைந்துள்ளதுடன் இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட பிராமணக் குருக்கள் இருவர் மூலம் மிகவும் சிறப்பாக பூஜை வழிபாடுகள் நடைபெறுகின்றன. நாமும் நெய் விளக்கு, தேசிக்காய் விளக்கு, ஏற்றி அர்ச்சனைகளை மேற்கொண்டு தேவாரத் திருப்பதிகங்கள், பஜனைப் பாடல்களை இங்குள்ள பஜனைக் குழுவினருடன் இணைந்து மேற் கொண்டதன் பின்னர் எமது யாத்திரையானது மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தை நோக்கியமைந்தது.

மட்டக்களப்பில் "அமிர்தகழி" எனும் பிரதேசத்தில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. மட்டக்களப்பு மக்களால் ஆடி அமாவாசை தீர்த்தச் சிறப்பு பெற்ற திருத்தலமாக மாமாங்கப் பிள்ளையார் விளங்குகின்றார். இராமனால் பூஜை செய்யப்பட்ட சிவலிங்கமே மூலஸ்தானக் கடவுளாகி பின்னர் இச் சிவலிங்கம் பிள்ளையார் அங்கியைப் பெற்று மாமாங்கப் பிள்ளையார் எனும் பெயரைப் பெற்றது. அத்துடன் இராமனால் அமைக்கப் பெற்ற தீர்த்தமும், அனுமனால் விந்திய மலையிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித சிவலிங்கத்தை நடுவே புதைத்த பெருமையும் இப் புனித தீர்த்தத்திற்கு உண்டு. இந்தியாவிலிருந்து வந்த முனிவர் ஒருவர் தமது கமண்ட லத்திலிருந்த கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, காவேரி, தாமிரபரணி, சேது முதலிய ஒன்பது கங்கைகள் கலந்த தீர்த்தத்தை இதில் கலந்ததால் இத் தீர்த்தம் புனிதம் பெறுகின்றது. இத்தகைய தீர்த்தத்தில் நாமும் ஸ்நானம் செய்து கொண்டு இப் பெருமானை வழிபட்டுக் கொண்டு எமது யாத்திரையை களுதாவளைப் பிள்ளையாரை நோக்கி தொடர்ந்தோம்.

கிழக்கிலங்கையின் இயற்கை எழில் மிகுந்த மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே இயற்கையாக அமையப்பெற்ற களுதாவளைப் பிள்ளையாரை நாமும் வழிபட்டோம். அப்போது அவ்வூர் மக்களால் சித்திர குப்தனாரின் கதை படிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. நாமும் சிறிது நேரம் அதில் இணைந்து கொண்டோம் மீண்டும் எமது யாத்திரையானது மண்டூர் முருகன் ஆலயத்தை நோக்கி நகர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டூர் முருகன் ஆலயத்தில் கப்புறாளை என அழைக்கப்படுபவர் களே பூசை செய்து கொண்டிருந்தார்கள். கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் நடைபெறும் பூஜை முறையே பின்பற்றப் பட்டதை அவதானிக்க முடிந்தது. பெரும் திரளான மக்கள் கூட்டம் இங்கு திரண்டிருந்தது. இக் கூட்டத்தோடு கூட்டமாக நாமும் இணைந்து முருகப்பெருமானைத் தரிசித்துக் கொண்டு எமது யாத்திரைப் பயணமானது கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தை அடைந்தது.

மட்டு நகரிலிருந்து தெற்கே மண்முனைத் துறையினூடாக பதின் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் கொக்கட்டிச்சோலை கிராமம் உள்ளது. இங்கு சிவபிரான் சுயம்புலிங்கமாக அமைந்து மக்களுக்கு அருள் பாலிக்கின் றார். இவ்வாலயத்தை முதன் முதலில் உலக நாச்சி ஆட்சி செய்த போது அவரால் வழிபடப் பெற்றதாகவும், பின்னர் போத்துக்கேயத் தளபதி அசலிடோவிற்கும், பூசகருக்கும் ஏற்பட்ட தர்க்கத்தின் போது பூசகர் கொடுத்த புல்லை கல் நந்தி உண்டு சாணம் போட்டதாகவும், அப்போது போத்துக்கேயத் தளபதி கோயிலை அழிக்காமல் சென்றதாகவும், பின்னர் இவ்வாலய மகிமையை அறிந்த குளக்கோட்ட மன்னன் தான்தோன்றீச்சரருக்குக் கோயில் அமைத்தான் எனவும் தலபுராணமும், ஐதீகக்கதைகளும் கூறுகின்றன. இத்தகைய மகிமை பெற்ற சிவனையும், லிங்கப் பெருமானை யும் தரிசித்து வழிபட்டுக்கொண்டு எமது யாத்திரை தொடர்ந்தது.

மீண்டும் வரும்வழியில் "மீன்பாடும் தேனாடு" எனப் புகழ்பெற்ற மட்டக்களப்புக் கல்லடிப் பாலத்தைப் பார்வையிட்டுக் கொண்டு கல்லடிக் கடலோரத்தில் அமர்ந்திருக்கும் ஈழத்துத் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தை வந்தடைந்தோம். இங்குள்ள ஆச்சிரம சபேசன் சுவாமி அவரது சீடர்கள், மற்றும் ஆலய அடியவர்களது அன்பையும் வரவேற்பையும் பெற்றோம். இவ் வாலய சுவாமிகளின் பாலவிஹார் சீடர்களில் முதன்மையான சீடனால் எமது சின்மயா மிசன் ஆச்சார்யார் அவர்களுக்கு பாத பூஜை வழிபாடு நடைபெற்றது. பின்னர் அனைவரும் ஈழத்து திருச்செந்தூர் முருகப்பெருமானை வழிபட்டோம். மேற்குப் புறமாக அமைந்திருந்த ஆலயமானது சுனாமியால் அடியோடு தகர்த்து எடுக்கப்பட்டு சரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் புதையுண்டு காட்சியளிக்கின்றது ஆயினும் பக்தர்களின் முயற்சியால் கிழக்கு நோக்கி புதிய ஆலயம் அமைக் கப்பட்டுள்ளது. நாமும் இப் பெருமானை வழிபட்டுக்கொண்டு இவ் ஆச்சிரமத்தில் எமக்கு மகிழ்ந்து அளிக்கப்பட்ட மதிய போசனத்தையும் பெற்றுக் கொண்டு சிறிது ஓய்வெடுத்தபின்னர் மீண்டும் கல்லடியிலுள்ள இராமகிருஷ்ண மிசனை நோக்கி யாத்திரை மேற்கொண்டோம்.

ஸ்ரீராமகிருஷ்ண மிசனில் சுவாமிகளின் பல்வேறு திருவுருவப் படங்களையும் தரிசித்துக்கொண்டு இங்குள்ள குரு சுவாமிகளிடமிருந்து ஸ்ரீராம கிருஷ்ணரது உபதேசங்களையும் நாம் பெற்றோம். அதன்போது ஆச்சிரம குருவானவர் எம்மை நோக்கி "எவன் ஒருவன் அதிகளவு குருமார்கள், ஞானிகள், முனிரிஷிகள், சாதுக்களை சந்திக்கின்றார்களோ, அதிகளவில் பெறுகின்றார்களோ அப்போது "நீ கடவுளை அடைந்து விடுகின்றாய்" என்ற ஆப்த வாக்கியத்தையும் பெற்றோம். பின்னர் சுவாமிகள் நீங்கள் யாவரும் புண்ணியம் செய்ததால் பாக்கியம் பெற்றுள்ளீர்கள். உங்களுக்கு நல்ல குரு கிடைத்துள்ளார். "குருவருள் துணையுடனே இறையருளை அடையமுடியும்" அந்தவகையில் நீங்களும் இறையருளை அடைவீர்கள் என ஆசீர்வதித்தார். பின்னர் பெரிய குருவிடம் நாம் அழைத்துச் செல்லப்பட்டோம். அவரிடம் நாம் ஆசிகளையும் பிரசாதத்தையும் பெற்றோம். சுவாமியால் "ஏகம் சத்" இறைவன் ஒருவன் என்ற வாக்கியத்தையும் "ஓம் ஸ்ரீ ராம ஜய ராம ஜய ஜய ராம" என்ற மகாமந்திரத்தினையும் உச்சரியுங்கள் எனக் கூற நாமும் உச்சரித்துக்கொண்டு எமது யாத்திரை மீண்டும் தொடர்ந்தது. மயிலம்பாவெளி கருணை இல்லத்தில் சிறிது ஓய்வெடுத்த பின் நீராடி விட்டு காமாட்சியம்மனை வழிபடுவதாக அமைந்தது.

அவ்வாறே மறுநாள் 11.05.2017 வியாழக்கிழமை காலை காமாட்சி யம்மனைத் தரிசித்துக்கொண்டு, கருணை இல்லத்தையும் சுற்றிப் பார்வை யிட்டதன் பின்னர் மட்டக்களப்பு காரைதீவுப் பிரதேசத்தைச் சென்றடைந் தோம். காரைதீவு சுவாமி விபுலானந்தர் பிறந்த இடமாகும். இங்கு சுவாமி விபுலானந்தர் பிறந்த இல்லம், மணி மண்டபம் நூலகம், சுவாமிகளின் சமாதி, உருவப்படங்கள், மகா வாக்கியங்கள் என்பவற்றைத் தரிசித்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையிலுள்ள சித்தானைக்குட்டிச் சுவாமிகளின் சமாதிக் கோயிலை அடைந்தோம். இங்கு "ஓம் சித்தர் காவலரே போற்றி, என்று திரையிடப்பட்டிருந்தது. மேலும் சுவாமியின் மகா வாக்கியங்களான "கோபத்தைவிடு இறைவன் அருள்தானே வரும்!, "கடமையில் தவறினால் கடவுளைக் காணமாட்டாய்!, "பசிந்து வந்தோர் முகம் பார்! "மரக்கறி உணவு மனதுக்கு மகிழ்ச்சி! "நெற்றிக்கு அழகு வீபூதி பூசுதல்!" போன்ற வாக்கியங்களை உச்சரித்து பின் சுவாமியின் சமாதியை வழிபட்டுக் கொண்டு எமது யாத்திரையானது உகந்தை முருகனை நோக்கித் தொடர்ந்தது. செல்லும் வழியில் மயில்கள் மற்றும் மான்கள், எருமைகள், பசுக்கள், யானைகள், குரங்குகள், முதலைகள் கூட்டம் கூட்டமாக இருப்பதை மகிழ்வுடன் பார்வையிட்டுக்கொண்டும், வயல் வெளிகளில் மயிலிறகுகளைச் சேகரித்துக்கொண்டும் வழியின் இரு மருங்கிலும் பல சித்தர் சுவாமிகளின் சமாதிகளையும் பார்த்த வண்ணம் உகந்தை முருகன் ஆலயத்தை அடைந்தோம்.

உகந்தை முருகன் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாட்டில் நாமும் கலந்துகொண்டு இங்கு வழங்கப்படும் அவல் பிரசாதத்தையும் பெற்றோம். மலையின் மேல் வள்ளியம்பாள் திருவுருவ தரிசனத்தையும், முருகனது வேல் தரிசனத்தையும், ஏழு சுனைகளில் பிரதானமான "சரவணப் பொய்கை" எனப்படும் பாவநாசச் சுனையையும் தரிசித்துக் கொண்டு மதிய போசனத்தை அருந்திய பின் எமது யாத்திரையானது கதிர்காமக் கந்தனை நோக்கித் தொடர்ந்தது. மொனராகலை மாவட்டத்தில் கதிர்காமக் கந்தன் ஆலயம் உள்ளது. உகந்தையிலிருந்து கதிர்காம இந்துகலாசார விடுதியை இரவு பத்து மணி யளவில் சென்றடைந்தோம். இங்கு இரவு ஓய்வின் பின்னர் மறு நாள் 12.05.2017 வெள்ளிக்கிழமை காலை ஆறு மணிக்கு செல்லக் கதிர்காமத்திற்கு எமது யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. அங்கு மாணிக்க கங்கையில் நீராடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தைத் தரிசித்தோம்.

புண்ணிய தீர்த்த கங்கைகளில் சென்று நின்றவுடன் முதலில் காலை நனைப்பது கூடாது. முதலில் தீர்த்தத்தை எடுத்து தலையில் தெளித்துக் கொண்டு செப்பு உலோக நாணயத்தை தீர்த்தத்தில் இட்ட பின் காலைக் கழுவிக்கொண்டு புனித நீராடலை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறே புனித கங்கை தீர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது மோட்சத்தை அளிக்க வல்லது. பாவத்தைப் போக்க வல்லது. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் அனைத்தையும் நீக்கவல்லது. பிரமஹத்தி தோஷத்தைப் போக்கவல்லது. எனப் புராணக்கதைகள் கூறுகின்றன. இவ்வாறே நாமும் நம்பிக்கையுடன் புனித தீர்த்தமாகிய மாணிக்க கங்கையில் புனித நீராடலை மேற்கொண்டோம். புனித கங்கையில் நீராடிக் கொண்டே மாணிக்கப் பிள்ளையாருக்கு நடைபெறும் பூஜைகள், தூப தீப ஒளிகள், மந்திர ஒலிகள், மணியோசைகளை பார்த்த வண்ணமும் கேட்ட வண்ணமும் நீராடும் அற்புதம் மாணிக்க கங்கைக்கே உரியதன்றோ. பின்னர் மாணிக்கப் பிள்ளையாரையும் வழிபட்டுக் கொண்டு எமது யாத்திரையானது கதிரமலையை நோக்கி அமைந்தது.

கதிரமலைக்கு எமது குருவுடன் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பாத யாத்திரை செய்தோம் எம்மில் சில வயோதிபர்கள், நோயாளர்கள் இங்குள்ள வாகனத்தின் மூலம் கதிரமலை முருகன் ஆலயத்தை அடைந்து வழிபட்டனர். இங்கு முருகப் பெருமானை வழிபட்டுக் கொண்டு அடுத்து சிவன் ஆலயத்தை வழிபட்டு, பக்திப்பாடல்கள் பாடி, பஜனை செய்த பின்னர், இங்குள்ள பௌத்த கோவிலையும் வழிபட்டுக்கொண்டு எமது யாத்திரையானது மீண்டும் மலையடிவாரத்தை அடைந்து இந்து கலாசார விடுதியை அடைந்தோம்.

பின்னர் மாலை பழைய கதிர்காமத்தை நோக்கி எமது யாத்திரை அமைந்தது. இங்கு முருகப் பெருமானை பக்தி சிரத்தையுடன், பஜனைக் குழுவுடன் இணைந்து பஜனைப் பாடல்களைப் பாடினோம். பின்னர் பிள்ளையார், முருகக் கடவுளின் பூஜை வழிபாட்டை முடித்துக்கொண்டு தெய்வயானை அம்மன் ஆலயத்தைத் தரிசித்தோம். இதற்கிடையில் பிள்ளையார் ஆலயம், பாலமுருகன், துர்க்கையம்மன், வள்ளியம்மன் ஆலயத்தையும் சென்று வழிபாடு செய்தோம். மீண்டும் தெய்வயானை அம்மன் ஆலயம் வந்து பூஜைகளில் கலந்து கொண்ட பின்னர் ஆச்சிரம குரு பூர்னானந்த கிரி சுவாமிகளின் ஆசியையும் பெற்றுக்கொண்டு இவ்வாலயத்திலுள்ள எட்டு சித்தர் சுவாமிகளின் சமாதியையும் வழிபட்டோம். "சமாதிகள் பேசுகின்றன." என்பதை எம்மால் உணரமுடிந்தது. அதன் பின்னர் இவ் ஆச்சிரமத்து அடியார்களால் வழங்கப்பட்ட இரவு போசனத்தை நாம் பெற்றுக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது விடுதியை அடைந்து ஓய்வெடுத்துக் கொண்டோம்.

மறு நாள் 13.05.2017 சனிக்கிழமை அதிகாலை ஐந்து மணிக்கு துயிலெழுந்து மாணிக்க கங்கையில் நீராடி மாணிக்கப்பிள்ளையாரை மீண்டும் வழிபட்டோம். இன, மத, மொழி வேறு பாடற்று அனைவரும் பக்தியுடன் பெருமானை வழிபட்டனர். சிங்கள இன பக்த அடியார்கள் தமிழில் பிள்ளையாருக்கு அழகாக பஜனை பாடும் சிறப்பினை இவ் ஆலயத்தில் மட்டுமே எம்மால் காண முடிந்தது. நாம் அனைவரும் ஒன்று கூடி பஜனை செய்து விட்டு மீண்டும் பழைய கதிர்காம முருகன் ஆலயத்தை அடைந்தோம். இங்கு முருகப்பெருமான், சமேத தெய்வயானை அம்மனையும், வள்ளியம்மன், பிள்ளையார் முதலிய கடவுளரையும் வழிபட்டுக் கொண்டும் இவ் ஆச்சிரம குரு சுவாமியிடம் ஆசியைப் பெற்றுக்கொண்டு எமது யாத்திரை மீண்டும் எமது பிரதேசமான யாழ்ப்பாணத்தை நோக்கி நகர்ந்தது. இரவு ஒன்பது மணியளவில் சின்மயா மிசனை வந்தடைந்தோம்.

இவ்வாறு எமது புனித யாத்திரையானது பக்திப் பரவசவத்துடனும், அன்புடனும் ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்து கொண்டும் எமது சின்மயா குருவின் வழிகாட்டலுடன் இனிதே நிறைவு பெற்றது. அடுத்த நாள் மதியம் கதிர்காமத்திற்கு சென்று புனித யாத்திரையை மேற்கொண்ட அனைவராலும் சின்மயா மிசனில் மதியபோசனம் சிறப்பாக நடைபெற்றது எனலாம். எனவே எமது யாத்திரை சிறப்பாக அடைவதற்கும் நாம் செய்த பாவங்கள் நீங்குவதற்கும் எமக்குப் புண்ணியத்தைத் தேடித் தந்து நற்கதி பெறுவதற்கு எம் வாழ்விற்கு வழிகாட்டிய எமது சின்மயா மிசன் குருவிற்கு எமது சின்மியா மிசன் அடியவர்கள் சார்பில் நன்றியையும், மகிழ்ச்சியையும்

**சுபோதினி இராசரத்தினம்**
**ஆசிரியர் யா/வேம்படி மகளிர்.**
**உயர்தர பாடசாலை**

★ **கடவுள் ஒரு பொருள் அல்ல வெளியில் தேடுவதற்கு, தேடுவதை நிறுத்து, அவரை உள்ளே கண்டு பிடி.**

★ **புத்தியை விருத்தி செய்வது இலகுவான செயல். ஆனால் இதயத்தை விருத்தி செய்வது கடினம்.**

*சுவாமி சின்மயானந்தர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்மய சிந்தனை
# எல்லாம் வல்ல பரம்பொருள்

யாழ் சின்மயாமிஷன் வதிவிட ஆச்சார்யார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்கள் "ஓம்" தொலைக்காட்சியில் தினந்தோறும் காலை 7.15 மணிக்கு "சின்மய சிந்தனை" என்ற தலைப்பில் சனாதன தர்மத்தில் உள்ள பல வாழ்வியல் தத்துவங்களை எடுத்துக்கூறி வருகின்றார். இந் நிகழ்வு தினமும் மாலை 6.45 மணிக்கும் இரவு 10.00 மணிக்கும் மறு ஒளிபரப்பாக இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

இதில் ***"எல்லாம் வல்ல பரம்பொருள்"*** என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரையைப் பார்ப்போம்.

"பரம்பொருள்" என்று சொல்லும்பொழுது இருக்கக்கூடிய பொருள் களிலே 'மிகவும் மேலானது' அதனாலே அதற்குப் பரம்பொருள் என்று பெயர் இந்த உலகைப் படைத்துக் காத்து, அழித்து, மறைத்து அருள் புரிகின்ற அந்தப் பரம்பொருளை இறைவன் என்றும், கடவுள் என்றும், ஆண்டவன் என்றும் சொல்லுகின்றோம். இவ்வாறு பலவித வார்த்தைகளை, நாம் அந்தப் பரம் பொருளைக் குறிப்பதற்குப் பயன்படுத்துகின்றோம். அந்த இறைவன் இருக் கின்றானா? இல்லையா? என்பது ஒரு கேள்வி. எல்லோருக்கும் இருக்கக்கூடிய ஒரு பொதுவான கேள்வி,

இந்த உலகத்தைப் பார்க்கும்பொழுது, எதுவுமே தானாக தோன்று வது கிடையாது. சின்ன வஸ்து முதல் பெரிய வஸ்து வரை அனைத்துமே மனித முயற்சியினால் உருவாக்கப்பட்டிருக்கும் பொழுது, இந்த அகிலாண்ட கோடி பிரம்மாண்டத்தை உருவாக்கியவர் யார்? நதிகள், கடல்கள், மலைகள், ஆறுகள், புற்கள், பூண்டுகள், கொடிகள், செடிகள், தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள், நட்சத்திரங்கள், நவக்கிரகங்கள் என இந்த நீக்கமற நிறைந்திருக்கின்ற அனைத்தையும் உருவாக்கியவர் யார்? உருவாக்கிய சக்தி எது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அனைத்திற்கும் ஆதி மூலமாக, ஆதி காரணமாக, ஏதோ ஒன்று இருக்கவேண்டும். அது தான் இவை அனைத்தையும் உருவாக்கி இருக்க வேண்டும் என்பதற்கு சான்றாக, ஆஸ்திகம் இருக்கின்றது. கடவுள் இருக்கின்றார் என்றும் ஒரு அப்பாற்பட்ட சக்தி இருக்கின்றது என்பதற்கும் சாட்சியாக இந்தப் பூலோகத்தில் இருக்கின்ற அனைத்துமே இருக்கின்றன. காரணம் இன்றிக் காரியம் இல்லை. இவை எல்லாவற்றையும் படைத்தவர் ஒருவர் இருக்கின்றார் (என்று அர்த்தம்).

இந்துக்களின் புனித நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற "ஸ்ரீமத் பகவத் கீதை"யில் அருச்சுனன் ஓர் இடத்தில் பகவானிடம், பகவானே எல் லோரும் உன்னை அடைவதற்கு முயற்சி செய்கிறார்கள். உன்னையே விரும்புகிறார்கள் என்று சொல்கின்றாயே. உன்னை ஏற்றுக் கொள்ளா தவர்கள் இந்தப் பூமியில் இருக்கத்தானே செய்கிறார்கள். அவர்களும் உன்னைத்தான் விரும்புகின்றார்கள் என்று நீ எப்படிச் சொல்ல முடியும்? என்று கேட்கிறான் அதற்கு பகவான் சொன்னார் கடவுள் இல்லை என்று சொல்கின்ற நாஸ்த்திகர்களும் சந்தோசமாக, மகிழ்ச்சியாக இருக்கத் தானே விரும்புகின்றார்கள். சந்தோஷமாக, மகிழ்ச்சியாக இருக்க யாருக்குத்தான் விருப்பமில்லை, அனைவருக்கும் விருப்பம் இருக்கிறது, அனைவரும் விரும்பும் அந்த சந்தோஷமும் 'நான்தான்' என்று பகவான் கிருஷ்ண பரமாத்மா பதிலிறுக்கின்றார்.

அனைவரும் நாடுவது அந்த நித்தியமான ஆனந்தம், சச்சிதானந்தம், அதுவே நான் என்கிற நிலையிலே எல்லோருமே இறைவனைத்தான் தேடிக் கொண்டு இருக்கின்றோம். அந்த நிரந்தரமான வரையறை இல்லாத ஆனந்தத்தைத்தான் தேடிக்கொண்டு இருக்கின்றோம். ஆகவே நாங்கள் அனைவரும் கடவுளைத்தான் தேடிக் கொண்டு இருக்கின்றோம்.

தொகுப்பு :S.பாலசந்திரன்
சின்மய குடும்பம்

**றமணன்**
**பந்தல் சேவை, பியூட்டிபாளர், பான்சி**
தொ.பே :- 077 491 1974, 070 277 2990, 021 221 5666,
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி மத்தி, அளவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் அனுபூதி புகட்டும் வேதாந்தம்

" கிரிவாய் விடு விக்ரம வேல் இறைவன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவாய்
அரிவாய் அடியோடும் அகந்தையையே"

ஏ! மனமே! கிரௌஞ்ச மலையைப் பிளந்த வலிமை தாங்கிய வேலை உடைய முருகக் கடவுளின் பரிவாரம் என்ற புனிதமான பதவியை அடைவதையே விரும்புவாய்! அதன் மூலம் நான் என்ற அகந்தையை அறிவாகிய வாளால் களைந்து அடியோடு நீக்குவாயாக!

இங்கு முருகக் கடவுளின் பரிவாரம் என்பது, கிண்ற்று நீர் பாத்திரங் களில் பாத்திர நீராகவும், எமது உருவம் பல விம்பங்களாகவும் தோற்றுவது போல், பரமாத்மா பல ஜீவாத்மாக்களாகத் தோற்றமளிப்பதை ஒத்தது எனலாம். கீதையில் கண்ணபிரான் "சகல ஜீவன்களிடத்தும் உள்ள ஜீவாத்மா நானே" என்று பகர்கிறார் இவ்வாறு வேல் இறைவனாகிய முருகப்பெருமானின் பரிவாரம் எனப்பட்டது பரமாத்மாவின் வடிவமாகிய ஜீவாத்மாவைக் குறித்து நிற்கிறது.

மேலும் சூரபதுமனின் தம்பியான தாரகாசுரன் கிரௌஞ்சமலை உருவெடுத்து முருகப் பெருமானுக்கு சவாலாக நின்ற வேளை, அம் மலையைத் தன் வீர வேல் மூலம் தகர்த்து வழி விடச் செய்தமை உவமானமாகக் கொண்டு நாம் எம் உடல், மனம், புத்தி எனும் கூறுகளோடு எம்மை(தவறுதலாக) இனங்கண்டு வாழ்தலை தவிர்த்து, ஆத்மாவோடு இனம் காணும் பேரறிவோடு வாழுமாறு அறைகூவல் விடுக்கின்றார் அருணகிரிநாதர்.

**செ. சிறீகந்தவேல்**
**அளவெட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத்தின் கணக்கு

தெய்வம் எப்படித் தீர்ப்பு வழங்குகிறது என நீண்ட நாள் சந்தேகம் அர்ஜுனனுக்கு, அர்ஜுனன் கண்ணனிடம் சென்று கண்ணா! தெய்வம் எதை வைத்து ஒருவனுக்குத் தீர்ப்பு வழங்குகிறது? என்று கேட்டான். அதற்குக் கண்ணன் அது உனக்குப் புரியாது. காலம் வரும்போது புரிந்து கொள்வாய் என்று கூறினான்.

இருவரும் ஒரு நாள் நகர் உலா வரும் போது ஒரு பெரிய முரடன் சூதாட அமர்ந்திருப்பதைக் காண்கிறார்கள். அவன் அராஜகத்தால் சேர்த்த சொத்தை வைத்து முதன் முதலாக ஆட வந்திருக்கின்றான். இவனைப் பார்த்ததும் அர்ஜுனனுக்கு கெட்ட கோபம் உண்டாயிற்று. கண்ணனைப் பார்த்து "இவனுக்கு நீ தண்டனை தருகிறாயா? அல்லது நான் தரட்டுமா? என்று கேட்டான். கண்ணன் அர்ஜுனா! நீ தர வேண்டாம் நானே தருகின்றேன் என்றான்.

தொடர்ந்து கண்ணன் கை அசைக்க அந்த முரடன் வென்று விடுகின் றான். அத்துடன் "ஆஹா நான் முதல் ஆட்டத்திலேயே வென்றுவிட்டேன்" என்று கூறிக் குதித்தான். அர்ஜுனனால் தாங்க முடியவில்லை. கண்ணா! இது என்ன தண்டிப்பதற்குப் பதிலாக அவனை வெற்றியடையச்செய்து விட்டாயே? என்று கண்ணனிடம் கேட்டான். அதற்குக் கண்ணன் அது தெய்வச் செயல், புரியாத சூட்சுமம், பேசாமல் வா... என்று கூறி அழைத்துச் சென்றார்.

வருத்தத்துடன் அர்ஜுனன் பின் தொடர கண்ணன் செல்கின்றான். வேறொரு இடத்தில் ஆதரவற்ற கிழவன் ஒருவன் பசுமாடு ஒன்றை வைத்து ஜீவனம் நடாத்துகின்றான். அவன் பசுவைத் தடவிக் கொடுத்துக் கொண்டே கண்ணா! கிருஷ்ணா! என்றழைத்தவாறே இருந்தான். இதனைப் பார்த்த அர்ஜுனன் கண்ணா! இவன் உன் பக்தன் இவனுக்கும் குசேலரை வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்ததுபோல் ஆசி வழங்கு என்றான். கண்ணன் சரி என்றான். அர்ஜுனன் தனக்குள் இந்த முறையாவது தான் கேட்டபடி கண்ணன் தீர்ப்பு செய்வார் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்த போது கிழவனின் பசு மாடு உடனே இறந்து விடுகின்றது.

கிழவன் ஐயோ கண்ணா! என் வாழ்வுக்கு இந்தப் பசு தான் ஆதார மாக இருந்தது. இனி நான் என்ன செய்வேன் என்று கதறினான். இதனைக் கண்ட அர்ஜுனன் "உனக்கு என்ன ஆயிற்று கண்ணா! ஏன் இப்படிச் செய்கிறாய்? என்று கேட்டான். உனக்குப் புரியாது என்று முதலிலேயே கூறினேனே புலம்பாமல் என் பின்னால் வா என்று கண்ணன் பணித்தான். அர்ஜுனனுக்குக் கண்ணன் மீது கோபம்.

எப்போதும் நல்லவர்களைக் காப்பேன். அதர்மத்தை அழிப்பேன் என்று கீதையில் எனக்கு உபதேசம் செய்த கண்ணனா இப்படிச் செய்கின்றான்? இனி யாரைத்தான் நம்ப முடியும்? என்று எண்ணினான். நான்கு ஆண்டுகள் கழிந்தன. கண்ணன் "அர்ஜுனா! முன்பு நாம் வெளியே சென்றபோது உனது இரண்டு கோரிக்கைகளுக்கும் எதிராகச் செயற்பட்டேன் என்று கோபப்பட்டாயே. இப்போது அந்த இடங்களுக்குச் சென்று பார்த்துவிட்டு வா"! என்றான்.

அர்ஜுனன் முதலில் முரடன் இருந்த இடத்தைத் தேடிச் செல்கின்றான் அந்த இடம் பாழடைந்திருக்க ஒரு குஷ்டரோகி அமர்ந்திருக்கின்றான். அவன் அர்ஜுனனைப் பார்த்து என்ன தேடுகிறாய் என்று கேட்டான். இங்கு நான்கு ஆண்டுகளுக்கு முன் ஒரு முரடன் சூதாடினான். அவனைத் தேடுகின்றேன் என்றான். அர்ஜுனன் நான்தான் அது. அன்று முதல் ஆட்டத்தில் தோற்றிருந்தால் மீதியுள்ள பணத்தைக் காப்பாற்றிக் கொண்டிருப்பேன். வெற்றியே எனது தோல்வி என்பதைப் புரிந்துகொள்ளாமல் கிடைத்த பணத்தில் தொடர்ந்து சூதாடி வாழ்ந்த வாழ்க்கை என்னை இந்த நிலைக்குத் தள்ளி விட்டது என்றான் அந்த குஷ்டரோகி, அர்ஜுனன் ஆச்சரியத்துடன் திரும்பினான்.

அர்ஜுனன் கிழவன் இருந்த இடத்தை நோக்கிச் சென்றான். அவ்விடத்தில் பெரிய ஆச்சிரமம் தென்பட்டது. நிறைய மக்கள் உள்ளே போய் வந்து கொண்டிருந்தனர். என்ன இது இடமே மாறி விட்டதே என்று அதிசயித் தான். உள்ளேயிருந்து ஓர் மகான் வருகிறார் வா அர்ஜுனா உன் சந்தேகத் தைத் தீர்க்க வந்தேன் என்றார். அர்ஜுனன் இங்கு ஒரு வயோதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாரே என்று கூறவும் உடனே அந்த மகான் அது நான் தான். நான் வாயினால் கிருஷ்ணன் பெயரைச் சொன்னேன். ஆனால் மனதால் பசுவைத் தான் நம்பினேன். பசு இறந்த பின் நான் உயிர் வாழ்ந்த போது தான் கிருஷ்ணனை உண்மையில் நம்பினேன். இன்று ஞானமடைந்து கிருஷ்ணன் அருளால் பலருக்கு நல்லவைகளை உபதேசிக்கின்றேன் என்றார்.

மேலும் தெய்வத்தின் கணக்கைச் சாதாரண மனிதனால் உணர முடியாது. ஆனால் நீ தெய்வத்தின் அருகிலேயே இருக்கும் பேறு பெற்றிருக்கின்றாய். அதை சந்தேகத்தால் வீணாக்காமல் கண்ணனின் பாதங்களை ஆயுள் முழுவதும் பற்றிக்கொண்டிரு என்று கூறினார்.

சந்தேகம் தீர்த்த அர்ஜுனன் விரைந்து வந்து கண்ணனை வணங்குகின்றான். புரிந்து கொண்டேன் கண்ணா! என்னை மன்னித்து விடு என்று மன்றாடினான். கண்ணன் புன்னகை பூக்கின்றான்.

***"அரசன் அன்றறுப்பான்***
***தெய்வம் நின்றறுக்கும்"***

***அன்பார்ந்த வாசகர்களே, சந்தாதாரர்களே***
***தங்களிடம் அன்பான வேண்டுதல்***
**"சின்மய நாதம்"**

யாழ் சின்மயா மிஷனின் காலாண்டு ஆன்மீக சஞ்சிகை 5ஆவது ஆண்டில் கால் பதித்துள்ளது. சின்மயநாதம் உங்கள் இல்லம் தேடி வர ஒரு வருஷத்திற்கு ரூபா 230/= செலுத்தி சந்தாதாரர் ஆகுங்கள்.ஏற்கனவே இணைந்துள்ளவர்கள் அதனைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். யாழ் சின்மயா மிஷனுக்கு நேரில் வருகை தரக்கூடியவர்கள் இதழ் ஒன்றுக்கு ரூபா 30/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு முன்னைய இதழ்களும் தேவையானோர் ரூபா 30/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு :- "சின்மயநாதம்"**
**சின்மயா மிஷன் ,சின்மய ஞானவேல்**
**இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.**
**தொ.பே. இல : 021 222 3447.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு தேவரிமிருந்து குழந்தைகட்கு...

[1968ஆம் ஆண்டு குரு தேவர் தவம் செய்வதற்காக தனது குருநாதர் வாழ்ந்த இடமான உத்தர காசி சென்றிருந்த போது குழந்தைகளுக்கு வரைந்த கடிதம்]

**என் அன்பிற்குரிய குழந்தைகளே...**

सर्वेऽपि सुखिनः सन्तु सर्वे सन्तु निरामयाः ।
सर्वे भद्राणि पश्यन्तु न कश्चिद् दुःखमाप्नुयात् ॥

*எல்லோரும் மகிழ்வே எய்துக*
*அனைவரும் நோயின்றித் துன்பமின்றி வாழ்க*
*எங்கும் மங்களம் பொங்குக.*
*நாராயண! நாராயண! நாராயண! வணக்கம்.*

நான் இப்போது, பாகீரதி (கங்கை) நதிக்கரையில் அமைந்துள்ள என் எளிய குடிலில் இருக்கிறேன். உங்களுக்கெல்லாம் இறையருள் கிட்ட ஏகாந்தத்தில் தவம் செய்து கொண்டிருக்கிறேன். இறைவனால் மட்டுமே உங்களை சிறந்தவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும் – நாட்டிற்கும், உன்னதமான இந்திய பண்பாட்டிற்கும், இந்து மதத்திற்குத் தொண்டாற்றக் கூடிய ஆடவர்களாகவும், பெண்டிர்களாகவும் உருவாக்க முடியும்.

உத்தரகாசிப் பள்ளத்தாக்கு இமய மலையில் கடல் மட்டத்திற்கு மேல் சுமார் 3800 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. எனவே, கோடையிலும் இங்கு நல்ல குளிர் இருக்கும். குளிர்காலத்தில் உறை பனியும் பொழியும். இங்கிருந்து தான் நம் புனித கங்கைத்தாய் – நம் நாட்டிற்கும் அங்கு வாழும் மக்களுக்கும் சேவை செய்ய ஓயாது பாய்ந்து செல்கிறாள். அவள் அன்பின் வடிவமாகவே பெருக்கெடுக்கிறாள். பாகீரதி அவ்வாறு வேகமாகப் பாயும் போது, அந்த குளிர்ந்த நீர் எழுப்பும் ஓசை உள்ளத்தை கவர்ந்து உற்சாகப்படுத்தும் இசையாகப் பாய்கிறது. இந்த இசை – வேகம் சூழ்ந்த, கம்பீரமான மலை முகடுகளிலும் எதிரொலிக்கின்றது. அச் சிகரங்கள், தம்மை பைன் மரச் சோலைகளால் போர்த்துக்கொண்டு பிரார்த்தனையிலும், ஆழ்நிலை தியானத்திலும் மூழ்கி இருப்பது போன்று காட்சியளிக்கின்றன. இங்கு, நம் குரு தேவரான 'தபோவன்' மஹராஜ்*டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில காலம் நான் இருந்திருக்கிறேன். குரு தேவர் எனக்கு உலகிற்கெல்லாம் அதிபதியான ஜகதீஸ்வரனை, நேரில் கண்டு தரிசித்த ரிஷிகளின் ரம்யமான அனுபவங்களைக் கூறும் உபநிஷத்துக்களை போதித்தார். நம் மனத்தை போதுமான அளவிற்கு தூய்மையாகவும், பூரண நிலையில் உயர்ந்ததாகவும், மிகுந்த திடத்துடனும் வைத்துக் கொண்டால் - பிரார்த்தனை, தியானம் இவற்றின் மூலமாக எவ்வாறு நாமும், பிருந்தாவன அதிபதியை நம் உள்ளத்தில் காண முடியும் என்பதை உபநிஷத்துக்கள் விளக்குகின்றன.

நம் குருதேவர் அன்புடன் எனக்கு, இங்கு இறைவனின் கீதமான, உலகில் மற்றவர்களுக்கிடையே அன்பினால் இடையறாது சேவை செய்து வாழும் முறையைக் கூறும் பகவத்கீதையையும் போதித்தார். குருதேவர் மிக்க கடுமையும், கண்டிப்பும் உள்ள ஆசிரியராக இருந்தார். ஒருமுறை போதித்ததை மறுமுறை விளக்கமாட்டார். அதுவே அவருடைய நிபந்தனை. அதற்கு நானும் கட்டுப்பட்டேன். அவ்வாறு அவர் போதித்தவற்றை நான் மறக்க நேரிட்டால் அவரைவிட்டு நான் போய் விட வேண்டும். ஏனெனில் மறதியுள்ள, கவனக் குறைவான மாணவர்களுக்கு அவர் மேற்கொண்டு போதிக்க மாட்டார். கங்கா தேவியின் அருளாலும், என் தந்தையொத்த குருதேவரின் அருளாலும், நான் கற்றவை அனைத்தையும் எப்போதும் நினைவில் இருத்திக் கொண்டேன். இறைவனிடம் தீவிரமான பிரார்த்தனையும், சிரத்தையான பக்தியும், கபடமற்ற அன்பு மயமான உள்ளமும், கொண்டிருந்தால் வாழ்வில் அனைத்தையும் சாதிக்கச் செய்யும்.

உண்மையான பக்தனுக்கு இயலாததேயில்லை. வெறும் பக்தி மட்டும் போதாது. உள்ளத்தில் இறை பக்தி என்றும் நடனமாட, கைகால்கள் வியர்வை சிந்த பணி புரிய வேண்டும். அறிவுபூர்வமாகச் சிந்திக்கவும் வேண்டும். இவ்வாறு இறைவனை அன்பினால் பற்றிக் கொண்டு, அவர் அன்புடன் நமக்களித்த மனோ சக்தியையும், திறமைகளையும் நாம் செவ்வனே பயன்படுத்துவோமாக! அவ்வாறு செய்கையில் எவருக்கும் தோல்வி இல்லை; எவருக்கும் இழப்பில்லை; துன்பமும் இல்லை.

அன்பே இந்து தர்மத்தின் அடித்தளமாகும். பிறரிடம் அன்பு செலுத்தத் தெரிந்தால் தான் நீ சிறந்த இந்து. உயர்ந்த மனிதர்கள் உயர்ந்தவர்களானார்கள் என்றால் அது அவர்கள் மற்றவர்களிடம் காட்டிய அன்பினால் தான். அவர்கள் அன்புசெலுத்தத் தெரிந்துகொண்டதனால் தான் உயர்ந்த மனிதர்கள் ஆனார்கள். அன்பு தான் இந்து மதத்தின் இதயம். மகத்தான இந்து சமுதாயத்தின் இளங் குழந்தைகளாகிய நாம் - அன்பு என்பது என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இறைவன் அன்பின் முழுவடிவம். அன்பினை உணர்ந்து கொண்டு, அனைவரிடமும் அன்பு காட்டும் முறையினையும் நமக்கு நாமே பயிற்றுவித்துக் கொண்டால் நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனான பரமேஸ்வரனுக்கு நாம் சேவை செய்தவர்கள் ஆகிறோம். இதைவிடச் சிறந்த பூஜை வேறு எதுவுமில்லை. ஆகையால் குழந்தைகளே அனைவரிடமும் அன்பாக இருங் கள்! அன்பு செலுத்துங்கள்!

எடுத்த எடுப்பில் இச் சிறிய கடிதத்தில் மட்டுமே அன்பைப் பற்றி முழுமையாகக் கூற இயலாது. எனவே நான் தொடர்ந்து பதினைந்து நாட் களுக்கு ஒருமுறை உங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன். உங்கள் பால விஹார் நடத்தும் சேவக சேவகியர்கள் இதனை வாரந் தோறும் படித்துக் காட்டி விளக்கங்கள் தருவார்கள். நீங்கள் ஒவ்வொருவரும், கடந்த வாரத்தில் கற்றுக் கொடுத்தவற்றை எல்லாம் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். ஆசிரியர், கடந்தவாரம் படித்துக் காட்டிய கடிதங்களில் இருந்து விரும்பியவாறு கேள்விகள் கேட்பார். அவை எல்லாவற்றிற்கும் உங்களால் விடை கூற இயல வேண்டும். அதற்குப் பின் அடுத்ததாகத் தொடர்ந்து நான் எழுதும் கடிதத்தை அவர் படித்துக் காண்பிப்பார். சரி தானே!

உத்தர காசியிலிருந்து, 50 மைல் வடக்கில் புனிதமான கங்கோத்திரி எனும் புனித ஸ்தலம் அமைந்துள்ளது. இங்கு தான் பகீரதன் எனும் அரசன் தவமியற்றினான். கங்கோத்திரிக்கு, 10 மைல் மேலே "கோ–முக்" எனும் இடத்திலிருந்து தான் பகீரதி புனித ஆறாக தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறாள். "கோ–முக்" எனும் இடத்திற்கு மேலே, எல்லாமே பனி. எங்கு நோக்கினும் உயரமான அடுக்கடுக்கான பனி மூடிய சிகரங்கள். எனவேதான் உலகின் உயரமான இம் மலை இமயமலை (ஹிமா = பனி) பனியின் உறை விடம் எனப் பெயர் பெற்றுள்ளது. இந்த உத்தரகாசியில்தான் புகழ்பெற்ற விஸ்வநாத சுவாமியின் ஆலயம் உள்ளது. குருதேவர் இந்த ஸௌம்ய காசி ஈசனையும். கங்கா தேவியையும் வணங்கும் சிறந்த பக்தர். இதுவே பரசுராமன், தன் முதிர்ந்த பிராயத்தில், தன் அரசியல் சமூக சேவைகளை முடித்து, தவம் செய்ய அமர்ந்த இடம். பள்ளத்தாக்குகளில் சொருகப்பட்டிருப்பது போல் காட்சியளிக்கும் கிராமங்களும், சிகரங்களும், உபநிஷத்துக்களின் புகழ் வாய்ந்த ரிஷிகளின் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. அந்த ரிஷிகள் அவர் தம் சீடர்களுடன் ஒரு காலத்தில் இங்கு முகாமிட்டிருக்கலாம்.

இத்தகைய பூரணத்துவம் எய்திய ஆசான்கள், தம் சீடர்களுக்கு அன்பு வழியைப் போதித்தனர். அன்பு வாழ்க்கையை வாழக் கற்றுக்கொண்ட பிறகு அவர்கள், சிறந்த இந்துக்களாக சேவைசெய்ய நாடு திரும்பினர். இது தான் இந்தியாவின், இந்திய பண்பாட்டின் உன்னதமான சிறப்பிற்கு காரண மான பரம இரகசியம். நீங்களும் அன்பு செலுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். தூய்மையான, உன்னதமான அன்பினால் நாம் உலகையே வெல்லலாம். உலகமனைத்தும் உள்ள மக்களை அன்பினால் பிணைத்து தழுவிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் பக்கம்



# உபநிடத சிந்தனைகள்



எமது சமயத்தின் முதல் நூல்கள், வேதங்களும் ஆகமங்களும் ஆகும். வேதங் கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நால்வகைப்படும். நால் வேதங் களும் முறையே சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங் கள் எனும் பிரிவுகளை உடையன.

சங்கிதைகள், பிராமணங்கள் – கர்மகாண்டம் (செயலுக்குரிய பகுதி)
ஆரணியங்கள் – உபாசனா காண்டம் (வழிபாட்டுக்குரிய பகுதி)
உபநிடதங்கள் – ஞான காண்டம் (அறிவுக்குரிய பகுதி)

உபநிடதங்கள் வேதங்களின் சாரமாக விளங்குகின்றன. இதனை வேத சிரசு, வேதாந்தம் என்பர். வேதத்தை பெரிய கடலாக கருதினால், உபநிடதங்களை மீன்களாக கருதலாம். இவை சிந்தனையின் சிகரம்.

*"பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே*
*பார்மிசை ஏதொரு நூலது போலே"*

என்று பாரதியார் பாடியுள்ளார்.

உபநிடதம் என்பது அருகிலிருந்து கேட்டல்' எனப்படும். (குரு குலக்கல்வி). கடோபநிடதம், பிருகதாரணிய உபநிடதம், சுவேதாஸ்வதர உபநிடதம், கேநோபநிடதம், ஐதரேய உபநிடதம், மைத்ரீ உபநிடதம் என உபநிடதங்கள் பல. உபநிடதங்களின் மூல நூல்கள் வடமொழியில் அமைந்துள்ளன.

**மாதங்கி**

## நாம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்

- **எம் வீட்டைச் சுற்றியிருக்கும் சுற்றுச்சூழலை பாதுகாப்போம்.**
- **எமக்கு இயன்றளவிற்கு மரங்கள், பூச்செடிகளை வைத்து அழகுபடுத்துவோம்.**
- **வீடு, பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்களின் உதவியுடன் புல், பூண்டு, மரம், செடி, கொடிகளை வைத்து பாடசாலையும் வகுப்பறையையும் அழகுபடுத்துவோம்.**
- **நாம் பிளாஸ்ரிக் பொருட்களைப் பாவிப்பதாலும், புதைப்பதாலும், எரிப்பதாலும் சூழல் மாசடைகின்றது.**
- **இதனால் நாமும், மரஞ்செடி, கொடிகளும் மாசடைந்து இருக்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இலங்கையில் இராமாயணம்"

### சர்வதேச வதிவிடப் பயிற்சி முகாம்

இலங்கை சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் இராம்போத (RAMBODA) வில் அமைந்துள்ள ஆஞ்சனேயர் ஆலயம் உட்பட்ட சின்மய கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள 'சின்மய சபா' மண்டபத்தில், 23.05.2017 செவ்வாய்க்கிழமை முதல் 27.05.2017 சனிக்கிழமை வரை "இலங்கையில் இராமாயணம்" என்னும் தலைப்பில் ஆங்கில மொழியில் 5 நாட்கள் கொண்ட சர்வதேச வதிவிடப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்தியா கோயாம்புத்தூர் சின்மயா மிஷனில் நீண்ட காலமாகப் பணியாற்றும் சுவாமினி விமலாத்மானந்தாஜி, கோவா சின்மயா மிஷனில் பணியாற்றும் சுவாமி நிகிலானந்தாஜி, இலங்கை சின்மயா மிஷன் கொழும்பு நிலையத்தில் பணியாற்றும் பிரம்மச்சாரி தர்ஷன் சைதன்யா ஆகியோர், வெவ்வேறு பெரியார்களால் அருளப்பெற்ற இராமாயணங் களில் உள்ள பல்வேறு கருத்துக்களை வழங்கினர்.

முதலில் பயிற்சி முகாமை ஆரம்பித்து வைத்த சுவாமினி அம்மா தனது உரையை பிரார்த்தனையுடன் ஆரம்பித்தார். அடுத்து இராமர் யார்? என்ற கேள்வியுடன் தனது உரையைத் தொடர்ந்தார். இராமபிரானே அந்தப் பரப்பிரம்மம், சர்வக்ஜன், சர்வ சத்திமான், அவரது சக்தி எண்ணிலடங்காதது. காலத்தைக் கடந்தவர். மனித தர்மத்தை அதன்படி வாழ்ந்து நிலைநாட்டியவர் இவரது வாழ்க்கைச் சரிதமே இராமாயணம் எனும் இதிகாசம் ஆகும். இதனைப் பலர் அருளியுள்ளனர்.இவை, வால்மீகி முனிவரால் அருளப்பெற்ற வால்மீகி இராமாயணம், துளசிதாசரால் அருளப்பெற்ற துளசி இராமாயணம், கம்பரால் அருளப்பெற்ற கம்பராமாயணம், வியாச பகவானால் அருளப்பெற்ற அத்யந்த இராமாயணம் மற்றும் அனந்த இராமாயணம் என இன்னும் சில, இதில் அத்யந்த இராமயணத்தில், இராமன் வனவாசம், இராம இராவண யுத்தம் முடிந்து அயோத்தி திரும்பி பட்டாபிஷேகம் முடிந்த பின்னர், அயோத்தி மக்களின் கருத்துக்களை தன் சித்தத்தில் கொண்டு சீதா பிராட்டியை மீண்டும் வனத்திற்கு அனுப்பிய பின்னர், ஸ்ரீ இராமருக்கும் இலட்சுமணனுக்கும் இடையே நடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பாஷணையே ஸ்ரீ இராம கீதா என பெயர் பெற்றுள்ளதாகவும் சுவாமினி அம்மா கூறினார்.

அடுத்து சுவாமி நிகிலானந்தாஜி துளசி இராமாயணம் குறித்த விளக்கங்களை அளித்தார். அதில் இராம பிரான் வனவாசத்தில் 'சித்திர கூடம்' எனும் பகுதியில் சந்தோஷமாக வாழும்போது அவரது தம்பியாரான இலட்சுமணன் ஸ்ரீ இராமரை அணுகி ஐந்து வினாக்களை எழுப்பினார். அவ்வினாக்களுக்கு இராமர் அளித்த விடைகள் அத்தனையும் வேதாந்த தத்துவக் கருத்துக்கள், மிக ஆழமானவை. இச் சம்பாஷனையே துளசி இராமாயணத்தில் ஸ்ரீ இராம கீதா' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலட்சுமணன் வினாவிய வினாக்கள் வருமாறு,

1. ஞானம் என்றால் என்ன?
2. வைராக்யம் என்றால் என்ன?
3. மாயை என்றால் என்ன?
4. பக்தி என்றால் என்ன?
5. ஜீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் என்ன வேறுபாடு?

இதில் இராம இலட்சுமணர்களை உதாரணமாகக் கொண்டு குரு-சிஷ்ய உறவு எப்படி இருக்க வேண்டுமென்பதையும் வெகு விரிவாக விளக்கினார். தொடர்ந்து 'கம்பராமாயணம் குறித்து விளக்கமளித்த பிரம்மச்சாரி தர்ஷன்ஜி அவர்கள், அதில் சில முக்கிய பாத்திரங்களையும், கட்டங்களைகளையும் எடுத்து கம்பரின் கவிதைகளை தமிழில் கூறி அதற்கான ஆங்கில மொழி பெயர்ப்பை அளித்தார். குறிப்பாக இராமர் வனவாசம் செல்லுதல் படகோட்டி சந்திப்பு, ஆஞ்சனேயரைச் சந்தித்தல் ஆஞ்சனேயர் சீதாபிராட்டியை அசோகவனத்தில் சந்தித்தல், ஆஞ்சனேயர் இராவணனை சந்தித்தல் ஆகியவற்றை கம்பர் எப்படி விளக்கியுள்ளார் என்பதைத் தெளிவாகக் கூறினார். இவ்வாறாக 5 நாட்களும் தொடர்ந்து விளக்கவுரைகள் நிகழ்த்தப்பட்டன. தினமும் ஒவ்வொரு நிகழ்வும் ஆரம்பமாகும் போதும் நாம பஜனை இடம் பெற்றதுடன் வியாழக்கிழமை குரு பாதுகா பூஜையும் இடம்பெற்றது. மேலும் குழுக் கலந்துரையாடல்களுக்கான நேரமும் வழங்கப்பட்டது. அத்துடன் இராமாயணத்துடன் தொடர்புடைய 'சீதா எலிய' சீதாபிராட்டி அக்னிப் பிரவேசம் செய்த அசோகவனம் ஆகிய இடங்களையும் தரிசிக்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. இறுதி நிகழ்வாக நன்றி பாராட்டும் நிகழ்வு 27ஆம் திகதி இரவு 7 மணிக்கு நடைபெற்று, சர்வ தேசத்திலும் இருந்து ஆன்மிக ஆர்வலர்கள் 50பேர் வரை பங்குபற்றிய "இலங்கையில் இராமாயணம் முகாம் இனிதே நிறைவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சுவாமிகளின் யாழ் விஜயம்

**சுவாமினி விமலானந்தாஜி**

இந்தியா கோயம்புத்தூர் சின்மயாமிஷனில் இருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்த சுவாமினி விமலானந்தாஜி 29.05.2017 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். 30.05.2017 செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை சென்று ஆலய தரிசனம் முடித்துக்கொண்டு அளவெட்டி சின்மயாமிஷன் நிலையத்துக்கு சென்று அங்குள்ள அடியார்களைச் சந்தித்து ஆசீர்வாதம் வழங்கினார். சத்சங்கமும் நிகழ்த்தினார். அவை பக்திபூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும் அமைந்திருந்தது.

அன்று மாலை யாழ் சின்மயாமிஷன் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் 6.30மணிமுதல் 7.30 மணிவரை "ஆனந்தமான வாழ்க்கைக்கு அற்புதமான குறிப்புக்கள்" எனும் தலைப்பில் சத்சங்கம் நிகழ்த்தினார். ஆங்கில மொழியில் அவர் ஆற்றிய உரை. யாழ் சின்மயாமிஷன் வதிவிட ஆச்சார்யார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டது.

வாழ்வில், சனாதன தர்மத்துக்குப் புறம்பான செய்யக்கூடாதனவற்றைச் சுட்டிக்காட்டி பின்னர் செய்யவேண்டியவற்றைக் கூறி, அதில் இறை வழிபாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறினார். அதன் போது எம்மில் பலர் இறை வழிபாட்டிற்கு நேரம் ஒதுக்க முடியாதுள்ளது என முறைப்படுவதைச் சுட்டிக்காட்டி அதுக்கு உதாரணமாக ஒரு கதை கூறினார். ஒருவர் கூர் மழுங்கிய கோடரியை வைத்து நாள் முழுவதும் ஒரு மரத்தை வெட்டிக் கொண்டிருந்தார். அவ்வாறே நாமும் சதாவேலை என ஓட்டிக்கொண்டிருக்கின்றோம். மரம் வெட்டியவர் சற்று நிதானித்து கூர் மழுங்கிய கோடரியைத் தீட்டி கூராக்கியிருந்தால் சக்தி இழப்பையும் தவிர்த்து நேரத்தையும் மீதப் படுத்தியிருக்கலாம். அவ்வாறே நாமும் நிதானித்து இறைவழிபாட்டில் ஈடுபட்டு எமது புத்தியைத் தீட்டி வேலையைத் திட்மிட்டுச் செயற்படுவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானால் வேலையில் திறமை, நேரம் மீதம், சக்தி இழப்பு தவிர்ப்பு இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என கூறாமல் கூறி விளங்க வைத்தார். இறுதியாக சத் சங்கத்தில் பங்குபற்றிய அடியார்கள் அனைவரையும் தினமும் குறைந்தது 5 நிமிடங்களாவது இறை வணக்கத்துக்காக செலவிடுவோம் என சங்கல்பம் செய்யுமாறு கேட்டுக்கொண்டு சத்சங்கத்தை நிறைவு செய்தார். நிகழ்வில் குழந்தைகள் முதல் பெரியோர் வரை 100பேர் பங்கு பற்றி ஆசீர்வாதம் பெற்றனர்.

## சுவாமி நிகிலானந்தாஜி

இந்தியா, கோவா சின்மயா மிஷனில் இருந்து இலங்கை வந்திருந்த சுவாமி நிகிலானந்தாஜி அவர்கள் 31.05.2017 புதன்கிழமை மாலை யாழ் சின்மயா மிஷனுக்கு வருகை தந்திருந்தார். யூன் முதலாம் திகதி வியாழக் கிழமை காலை அடியார்களுடன் கீரிமலை சென்று கடலில் நீராடி சிவன் ஆலய தரிசனம் முடித்துக்கொண்டு அளவெட்டி சின்மயாமிஷன் நிலையத் திற்கு சென்று அங்கு அடியார்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆசிகள் வழங் கியதுடன் சத்சங்கமும் நிகழ்த்தினார். சிறப்பாக இருந்தது. அன்று மாலை சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் 6.30முதல் 7.30வரை "வாழ்க்கைக்கான சரியான வழி முறை" எனும் தலைப்பில் சத்சங்கம் நிகழ்த்தினார். இதன்போது, வாழ்க்கை வெற்றிகரமாக அமை வதற்கு, நாம் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் சிலவற்றை எடுத்துக் கூறினார். அவற்றில் சில துளிகள் வருமாறு,

ஒரு செயலை நாம் செய்யும் போது, எப்படி அந்த செயலைச் செய்கின்றோம் என்பதைப் பொறுத்து அவற்றின் பலன்களைப் பெற்றுக் கொள்கின்றோம். நாங்கள் உணர்வுகளையும் சேர்த்து செயல்களைச் செய்யும் பொழுது அவை பலம் மிக்கவையாக மாறுகின்றன. இறைவனுக்கு ஒரு பூவைச் சமர்ப்பிக்கின்ற போது அதை வெறுமனே சமர்ப்பிப்பது அல்ல என்ன வித மனப்பாங்கோடு, என்னவித நம்பிக்கையோடு நாங்கள் அவற்றை அர்ப்பணிக்கின்றோம் என்பதைப் பொறுத்து அதன் விளைவு அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறைவனுக்கு நாங்கள் ஒரு நைவேத்தியத்தைப் படைக்கும் பொழுது, அதனை பத்தி பாவத்தோடு படைத்து விட்டு அதன்பின் அதைப் பிரசாதமாக ஏற்று உண்ணும் பொழுது அது ஒரு வித்தியாசமான சுவையை எமக்குத் தருகின்றது" என்றார். மேலும் இறைவழிபாட்டின் மூலம் வாழ்வில் வெற்றியை அடைய லாம் என்று கூறி அதற்கு இரமண மகரிஷி கூறிய மூன்று முறைகளையும் எடுத்து விளக்கினார். அவை 1. சேவை (பூஜை) 2. நாம ஜெபம், 3. தியானம். இறைவன் எங்கும் நிறைந்துள்ளார். ஆகவே நாம் இறை சேவை செய்வது என்பது, எமக்கு எமது குடும்பத்துக்கு, அயலவர்க்கு, சகல உயிரினங்களுக்கும், எமது தோட்டத்தில் எல்லாமே எம்முள் இருக்கும் அந்த இறைவனே செய்கின்றார் என்ற மனப்பாங்கோடு செய்ய வேண்டும் என்றும் இது இறைவனோடு நம்மை இணைப்பதற்கு சிறந்த ஊடகம் என்றும் கூறினார்.

அடுத்து நாம் ஜபம் செய்தல், அதாவது இறைவனது நாமத்தை உச் சரித்தல். இறைவனுடைய நாமத்தை நாம் ஆழ்ந்த பக்தியோடு முழுமையான நம்பிக்கையோடு பாராயணம் செய்யும் போது அது எங்களை இறைவனோடு இணைக்கின்றது. அந்த நாம பாராயணத்திற்கு அவ்வளவு சக்தி உண்டு. நாம் வாழும் கலியுகத்தில் நாம பாராயணமே இறைவனை அடைய, உணர வழிவகுக்கும் என்று கூறப்படுகின்றது. நாம ஜபம் என்பது குறித்த நேரத்தில் தான் செய்ய வேண்டும் என்பதல்ல. சதா நாம் என்ன முயற்சியில் ஈடுபட்டிருக் கும் போதும் ஏன் நோயுற்றிருக்கும் போதும் கூட செய்யலாம்.

**தியானம்**

இது இறைவனோடு ஐக்கியமாகும், நான் வேறு இறைவன் வேறு அல்ல என உணரும் நிலை, எவ்வாறு ஒரு உப்பு பொம்மையை கடலினுள் அமிழ்த்தினால் அது ஆழச் செல்லச் செல்ல கரைந்து இரண்டற்ற நிலை உருவாகிறதோ அவ்வாறே ஆழ்ந்த இறை தியான நிலை. இவ்வாறு நாம் இறைவனோடு ஐக்கியமாதலே வாழ்க்கையின் குறிக்கோள் எனக்கூறி நிறைவுசெய்தார்.

**ஸ்ரீ கிருஷ்ணா மொழிபெயர்ப்பு சேவை**

தமிழ் – ஆங்கில மொழி பெயர்ப்பு, ஆங்கில கடித வரைபு ஆகியன தரமாகவும், தெளிவாகவும் Email மூலமும் வழங்கப்படும். தொடர்பு: 0775759514, 0718616175



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## ஸ்ரீராம நவமி

ஸ்ரீ ராம நவமி தினத்தை முன்னிட்டு ஏப்பிரல் மாதம் 5ஆம் திகதி மாலை 5.00மணி முதல் 6.30மணிவரை யாழ் சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் பஜனை, பூஜை, சத்சங்கம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் திருநெல்வேலி கருணாலயம் நிலையத்தில் வாழும் பிள்ளைகள் வருகைதந்து ராம நாம பஜனையில் பங்குகொண்டனர்.

## "கூடி மகிழ்வோம்" பாலவிஹார் முகாம்

ஏப்பிரல் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.00மணி முதல் ஏப்பிரல் 10ஆம் திகதி திங்கட்கிழமை மாலை வரை சின்மய பாலவிஹார் சிறார்களுக்கான வதிவிடப்பயிற்சி முகாம் சின்மயாமிஷன் ஆச்சிரமத்தில் நடைபெற்றது. இதில் ஆண்டு 2 வரையான குழந்தைகள் காலை 8.30 மணியில் இருந்து 12.30 மணிவரையும் ஆண்டு 3 முதல் 5வரையானோர் காலை 8.30 மணியில் இருந்து மாலை 4.30 மணிவரையும், ஆண்டு 6, 7, 8 வரையானோர் 3 நாட்களும் ஆச்சிரமத்தில் தங்கியிருந்தும் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இறுதி நாளான 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7மணிக்கு குழந்தைகள் அனைவரும் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு ஆலய தரிசனம், சத்சங்கம், பொங்கல் ஆகியவற்றில் ஈடுபட்டு பிற்பகல் 1.00 மணியளவில் ஆச்சிரமம் திரும்பினர். இதன்போது பாலவிஹார் குழந்தைகளின் பெற்றோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சி முகாமில் 40வரையான ஆண் பெண் இருபாலாருமான குழந்தைகளும் பங்குபற்றிக் கூடி மகிழ்ந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சின்மய சங்கமம்

'ஹே விளம்பி' புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு ஏப்பிரல் மாதம் 14ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பக்கத்தில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சின்மயா மிஷனின் புதிய காணியில் சின்மய சங்கம நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் குழந்தைகள் முதல் பெரியோர்வரை 100பேர் வரை கலந்து மகிழ்ந்திருந்தனர். இதன்போது யாழ் சின்மயா மிஷனால் வெளியிடப்பட்டு வரும் காலாண்டுச் சஞ்சிகையான சின்மயநாதம் மலர் 4 இதழ் 4 (16ஆவது இதழ்) வெளியீடும் இடம்பெற்றது.

### இரத்த தான முகாம்

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் ஜயந்தி தினத்தை முன்னிட்டு 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை யாழ் சின்மயாமிஷன் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கி உத்தியோகத் தர்களின் அனுசரணையுடன் இரத்ததான முகாம் நடாத்தப்பட்டது.

### குருதேவர் ஜயந்தி தினம்

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் ஜயந்தி தினமான மே மாதம் 8ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.00மணி முதல் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் பஜனை, குருபாதுகாபூஜை, சத்சங்கம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன. பங்குபற்றியவர்கள் குருதேவரது படம் வைத்து தனித்தனியாகப் பூஜை செய்யும் வாய்ப்பும் வழங்கப்பட்டது.

### கதிர்காம யாத்திரை

யாழ் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சார்யார் அவர்களின் வழிகாட்டலில் சின்மய குடும்ப அங்கத்தவர்கள், குழந்தைகள் முதல் முதியோர்வரை 50பேர் கொண்ட குழுவாக மே மாதம் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 13ஆம் திகதி சனிக்கிழமை வரை கதிர்காம தல யாத்திரை மேற்கொள் ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்

## குரு பூர்ணிமா

யூலை மாதம் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணி முதல் சின்மயாமிஷன் ஆச்சிரமத்தில் குரு பூர்ணிமா (வியாச ஜயந்தி) அனுஷ்டிக் கப்படஉள்ளது. நிகழ்வில் பஜனை, பூஜை, சத்சங்கம் நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

## இந்துவாக வாழ்வோம்

எதிர்வரும் யூலைமாதம் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ ஆரம்பதினமான கொடியேற்றத்தில் இருந்து ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழா வரை, யாழ் சின்மயா மிஷனால் 2013ஆம் ஆண்டு மஹோற்சவ காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட்டு வரும் "இந்துவாக வாழ்வோம்" செயற்பாடுகள் நடைபெறவுள்ளன.

### 1. பஜனை

இதில் பாடசாலை மற்றும் அறநெறிப்பாடசாலைகளை உள்வாங்கி நடாத்தப்பெறும் பஜனை நிகழ்வு 25நாட்களும் நடாத்தப்படவுள்ளது.

### ௨. அருளுரை

மஞ்சத்திருவிழா அதாவது 10ஆவது நாள் உற்சவத்தில் இருந்து தீர்த்தத் திருவிழாவரை தினமும் மாலை பள்ளியறைப் பூஜை முடிந்ததும் 45 நிமிடங்கள் யாழ் சின்மயாமிஷன் வதிவிட ஆச்சார்யார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா அவர்கள், புதிய சின்மயாமிஷன் ஆச்சிரமம் அமைய உள்ள இல 700, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள காணியில் அமைக்கப்பட்ட இடத்தில் அருளுரை வழங்கவுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. கண்காட்சி

சின்மய சேதுகாரி மற்றும் சின்மய யுவகேந்திரா அணியினரால் "எமது மனம் எமது பலம்" எனும் தலைப்பில் கண்காட்சி புதிய காணியில் 10ஆம் திருவிழாவில் இருந்து நடாத்தப்படவுள்ளது.

### குருதேவர் ஆராதனை தினம்

ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தர் அவர்களின் (சமாதி தினம்) ஆராதனை தினம் சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

### விநாயகர் சதுர்த்தி

ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர் சதுர்த்தி வழிபாடுகள் விசேஷமாக சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

### ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

### நவராத்திரி

செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை முதல் 29ஆம் திகதி மஹா நவமி வரை 10 நாட்கள் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் நவராத்திரி பூஜைகள் நடைபெறவுள்ளது. 30ஆம் திகதி சனிக் கிழமை விஜயதசமியை முன்னிட்டு குழந்தைகளுக்கான ஏடு துவக்குதல் நிகழ்வு நடைபெறும்.

### ஐயம் தெளிதல்

**அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!**

ஆன்மீகம் சார்ந்த உங்கள் ஐயங்களை வினாக்களாக்கி ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பீர்களாயின் அடுத்த இதழில் உங்கள் வினாக்களுக்கான ஆச்சார்யார்களின் பதில்கள் பிரசுரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேஷ தினங்கள்

## யூலை - 2017

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | செவ் | சயன ஏகாதசி | 21 | வெள் | பிரதோஷம் |
| 6 | வியா | பிரதோஷம் | 23 | ஞாயிறு | ஆடி அமாவாசை |
| 8 | சனி | பூரணை விரதம் | 26 | புதன் | ஆடிப்பூரம் |
| 9 | ஞாயிறு | குரு பூர்ணிமா | 28 | வெள் | நல்லூர் கந்தசுவாமி ஆலயம் கொடியேற்றம் |
| 17 | திங் | ஆடிப்பிறப்பு | | | |
| 18 | செவ் | கார்த்திகை விரதம் | 30 | ஞாயிறு | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை |
| 19 | புதன் | ஏகாதசி விரதம் | | | |

## ஆகஸ்ட் - 2017

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | வியா | ஏகாதசி விரதம் | | | திருவிழா |
| | | குருதேவர் ஆராதனை தினம் | 18 | வெள் | ஏகாதசி |
| | | | 19 | சனி | பிரதோஷம் |
| 4 | வெள் | வரலஷ்மி விரதம் | 20 | ஞாயி | நல்லூர் தேர் |
| 5 | சனி | பிரதோஷ விரதம் | 21 | திங் | நல்லூர் தீர்த்தம் |
| 7 | திங் | பூரணை விரதம் நல்லூர் மஞ்சம் | 25 | வெள் | விநாயகர் சதுர்த்தி விரதம் |

## செப்ரெம்பர் - 2017

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | சனி | ஏகாதசி விரதம் | 19 | செவ் | அமாவாசை விரதம் |
| 3 | ஞாயிறு | பிரதோஷ விரதம் | 20 | புத | நவராத்திரி விரதம் |
| 4 | திங் | நடேசரபிஷேகம் | 23 | சனி | சதுர்த்தி |
| 5 | செவ் | பூரணை விரதம் | 29 | வெள் | ஸரஸ்வதி பூஜை, மஹா நவமி, |
| 10 | ஞாயி | மஹா பரணி | | | |
| 11 | திங் | கார்த்திகை விரதம் | 30 | சனி | விஜயதசமி, கேதார கௌரி விரதம் |
| 12 | செவ் | ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி | | | |
| 17 | ஞாயி | பிரதோஷவிரதம் | | | |


## விளம்பரங்கள்

சின்மயநாதம் சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கு தங்கள் விளம்பரங்களை தந்துதவ வேண்டுகின்றோம் விளம்பரம் தர விரும்புவோர் தாங்கள் பிரசுரிக்க விரும்பும் தகவல்களைத் தருவதுடன் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களை அறிந்து கொள்ளவும். தங்கள் ஆதரவை வேண்டுகின்றோம்.

தொ.பே.0212223447
Email: chinmayamissionjaffna@gmail.com

சின்மயா மிஷன்
இல.9, செட்டித்தெரு ஒழுங்கை
நல்லூர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடி மகிழ்வோம் பாலவிஹார் பயிற்சிப் பட்டறையில்






## புதுவருட சின்மய சங்கம நிகழ்வும் சின்மய நாதம் 16வது இதழ் வெளியீடும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம யாத்திரையின் போது.......





கதிரமலை உச்சியில் சிவன் ஆலயம்





மட்டக்களப்பு காரைதீவில் சுவாமி விபுலானந்தர் நினைவாலயம்



மட்டக்களப்பு மயிலம்பாவெளியில்.....



மட்டக்களப்பு காரைதீவு சித்தானைக்குட்டி சுவாமிகளின் சமாதியில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org